

அமெரிக்காவிலிருந்து
வந்த நோயற்ற
ஒரு நாள் பொரித்த
வளரும்
கோழிக்குஞ்சுகள்
ஏகவிநியோகஸ்தர்கள்:
றாவ் டொப் பண்ணை
233/8, கொட்டா ரோட்,
கொழும்பு-8
த. பெ. இல. 602. போன்: 92118



★ ★ ★ ★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (18-11-66) இதழ் 277

பராபவ ஷஃபான் 4 கார்த்திகை 3 வெள்ளிக்கிழமை



ஈழநாடு
சந்தா விபரம்
இலங்கை-இந்தியா
ஒரு வருடம் ரூ. 50-00
ஆறு மாதம் ரூ. 26-00
மூன்று மாதம் ரூ. 14-00
மலேசியா
ஒரு வருடம் ரூ. 70-00
ஆறு மாதம் ரூ. 38-50
மூன்று மாதம் ரூ. 20-50
தினசரி பிரதி: 10 சதம்
வாரப் பதிப்பு பிரதி 20 சதம்


# சித்திரைமாதம் முதல் தமிழில் அலுவல்கள்

## யாழ். மாவட்ட விவசாயக்குழு முடிவு

திருநெல்வேலி, வெள்ளி

யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் குழுக்கூட்ட நிகழ்ச்சிகள் அடுத்த சித்திரை வருடத்திலிருந்து தமிழ்மொழியில் நடைபெறுமென்று தெரிகிறது. நேற்றுநடைபெற்ற மாவட்டவிவசாய இணைப்புக்குழுக்கூட்ட அலுவல்கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றன. தமிழ் மொழியில் நடைபெறவேண்டுமென கோரப்பட்டபொழுது இதற்குப் போதிய முன்னறிவித்தல் கொடுக்கப்படாததால் அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லையென்று தெரிவிக்கப்பட்டது. இதன்பின் சித்திரை மாதத்திலிருந்து மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டம், மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் ஆகியவை தமிழில் நடைபெறவேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாண மாவட்ட விவசாய இணைப்புக்குழுக் கூட்டம் நேற்று அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. டி. டபிள்யு. ஆர். செல்வரத்தினம் உட்பட மற்றும் காரியாதிகாரிகள் அரசாங்க அதிகாரிகள், விவசாய உத்தியோகத்தர்கள், யாழ். மாவட்ட எம். பி.க்கள் பலர் கலந்துகொண்டனர்.

முதலாளிகள்

## மந்திரியின் திட்டத்தை முற்றாக நிராகரித்தனர்

### வர்த்தக ஊழியர் பிரச்னையில் தொடர்ந்து முட்டுக்கட்டை

கொழும்பு, வியா.

தொழில் மந்திரி எச். எம். முகம்மதலி தெரிவித்த எட்டு அம்ச சமரசத்திட்டத்தை முதலாளிமார் சம்மேளனம் முற்றாக நிராகரித்துவிட்டது.

67 ஸ்தாபனங்களில் நடைபெற்றுவரும் வர்த்தக ஊழியர்சங்க அங்கத்தவர்களின் வேலை நிறுத்தப்பிரச்னைகளுக்கு ஒரு முடிவுகட்டுமுகமாக தெளிவில்மந்திரிஎட்டு அம்சங்களைக் கொண்ட ஒரு சமரசத் திட்டத்தை தயாரித்திருந்தார். இதனை ஸ்திரமான யோசனை என்ற அடிப்படையில் வர்த்தக ஊழியர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆனால் முதலாளிமார் சம்மேளனம் திட்டத்தின் போனஸ் சம்பந்தமாகவும் கூட்டு ஒப்பந்தம் அமுலுக்கு வரவேண்டிய திகதி மற்றியும் அபிப்பிராயபேதம் கொண்டிருந்தனர். அந்த அம்சங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவந்தனர். அதைத்தொடர்ந்து மந்திரி முதலாளிமார் சம்மேளனத்துக்கு எழுதிய ஒரு கடிதத்தில் தமது முடிவை மறுபரிசிலனை செய்யும்படி கேட்டுக்கொண்டார். இதற்கு இப்போது முதலாளிமார் சம்மேளனம் அனுப்பியுள்ள பதிலில் மந்திரியின் திட்டத்தை முற்றாக நிராகரித்துவிட்டது. முதலாளிமார் சம்மேளனம் தனது முடிவை

(8-ம் பக்கம் பார்க்க)

## முதல் பரிசு ரூ. 98,720

### தேசியசுவீப் முடிவுகள்

கொழும்பு, வியா

இன்று மாலை இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாம்பரிசு
06 M 0190 ரூ. 98,720

இரண்டாம் பரிசு
03 N 0325 ரூ. 39,488

மூன்றும் பரிசு
18 G 0078 ரூ. 9,872

தலா ரூ. 493-60 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 14 R 0487 | 24 W 0114 |
| 25 J 0020 | 13 F 0223 |
| 31 Q 0518 | 09 R 0510 |
| 29 M 0939 | 08 Z 0587 |
| 19 B 0301 | 14 W0203 |
| 30 L 0343 | 19 C 0101 |
| 01 B 0962 | 26 Z 0655 |
| 07 K 0260 | 18 V 0271 |
| 35 Y 0386 | 18 A 0666 |
| 30 Z 0697 | 21 Z 0727 |
| 16 T 0227 | 18 V 0008 |
| 30 G 0570 | 11 B 0523 |
| 15 W 0739 | 04 V 0511 |
| 15 O 0319 | 17 S 0634 |
| 29 K 0153 | 26 E 0334 |
| 18 K 0174 | 05 Q 0524 |
| 16 M 0163 | 07 F 0099 |
| 03 Y 0549 | 20 C 0942 |
| 29 Z 0228 | 16 V 0685 |
| 09 N 0494 | 38 S 0312 |
| 26 L 0631 | 35 M 0375 |
| 13 G 0794 | 33 G 0824 |
| 24 H 0763 | 34 H 0644 |
| 11 Y 0180 | 12 T 0458 |
| 15 R 0446 | 03 M 0795 |
| 30 P 0247 | 08 Y 0872 |
| 27 G 0681 | 19 W 0336 |
| 12 V 0112 | 14 E 0719 |
| 13 O 0320 | 20 L 0646 |
| 07 D 0719 | 25 E 0605 |
| 18 A 0867 | 03 K 0314 |
| 07 Y 0186 | 32 H 0483 |
| 16 M [illegible] | [illegible] C 0412 |

(8-ம் பக்கம் பார்க்க)

## முந்திரிச் செய்கைக்கு முந்திரி விதை இல்லை

யாழ்ப்பாண மாவட்டத்தில் முந்திரிச் செய்கைக்கு ஊக்கமளிப்பதென்றும் முடிக்குரிய காணிகளை முந்திரிச் செய்கைக்காக பங்கீடுசெய்வதென்றும் காணி அமைச்சு தீர்மானித்து இதற்கென காணிக்கச்சேரிகளும் வைக்கப்பட்டன. முந்திரிச்செய்கைவெற்றியளித்தால் முந்திரிப்பருப்பு ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணிகிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முந்திரிசெய்கைபண்ணுவதற்காக விதை முந்திரி தேவையென கேட்கப்பட்டபொழுது முந்திரி விதை கைவசம் இல்லையென்று கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டதாம். இத்தகவல்

(8-ம் பக்கம் பார்க்க)

சிறுபான்மைத் தமிழருக்கு

## பட்டினசபையில் ஒரு ஸ்தானம்

### உள்ளூராட்சி அமைச்சர் நடவடிக்கை

உடுவில், வியாழன்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் சுன்னாகம் பட்டினசபையில் சிறுபான்மைத் தமிழர்களுக்கென ஒரு வட்டாரத்தை உருவாக்கவும் உடுவில் கிராமசபையின் 23ம், 24ம் வட்டாரத்தை சுன்னாகம் பட்டினசபையின் ஐந்தாம் வட்டாரத்துடன் இணைப்பதற்காகவும் எல்லை நிர்ணயக் குழுவை நியமித்துள்ளார். இக்குழுவின் தலைவராக வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. நல்லைநாதன் நியமிக்கப்பட்டுள்ளார் இக்குழு சுன்னாகம் பட்டினசபையின் எல்லைக்குள் இருக்கும் சங்கங்கள், பொது ஸ்தாபனங்கள், மற்றும் வரியிறுப்பாளர்கள் ஆகியோரிடமிருந்து சாட்சியங்களையும் அபிப்பிராயங்களையும் சேகரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

யாழ்ப்பாணத்தில்

## படித்த இளம் பெண்களுக்கு குடியேற்றத்திட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''கல்யாண மாகாதகன்னிப் பெண்களுக்கான குடியேற்றத் திட்டமொன்று முதன்முலாக யாழ்ப்பாணப் பகுதியில் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 45 படித்த கன்னிப்பெண்களுக்கு ஒரு ஏக்கர் வீதம் காணி வழங்கப்படும். அத்துடன் வீடுகள், கிணறுகள் சௌவுசாலையொன்றும், கட்டிக்கொடுக்கப்படும். இந்த நிலத்தில் பழவகைஉற்பத்தி செய்துஅதன்மூலம் 'ஜாம்' தயாரிக்க உதவியளிக்கப்படும்.''

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரவித்தியாலய உயர் வகுப்பு விஞ்ஞான மாணவர்களின் ஆண்டு விழாவில் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் சொற்பொழிவாற்றும்போது மேற்கண்டதகவலை வெளியிட்டார்.

செல்வி. ந. வானரசன் தலைமையில் நடைபெற்ற

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு தடுப்புமுகாம் காவல் பலப்படுத்தப்படுகிறது

திருநெல்வேலி, வெள்ளி

ஆனையிறவு சோதனைத் தடுப்பு முகாம்களைக்கடத்தலை முற்றாகத் தடுக்கு முகமாக மேலும் விஸ்தரிக்கப்படுகிறது. இம்மாதம் 19-ம் திகதி தொடக்கம் அங்கு அதிக பொலிஸ் உத்தியோகத்தர்களை கடமையாற்ற அனுப்பிவைக்க யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. தனையசிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆனையிறவுக்கூடாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும் பல பொருள்களைக் கள்ளத்தனமாகக் கடத்திச்செல்லப்படுகிறதென்றும் அதனைத்தரிதமாகத் தடுக்க இப்போது ஆனையிறவுப் பொலிஸ் தடுப்பு முகாமில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் போதாதென்பதாலுமே இந்நடவடிக்கைமேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

நாளை தொடக்கம் இங்கு ஒரு பொலிஸ் சார்ஜண்டும் பத்து பொலிஸ் கான்ஸ்டபிள்களும் மேலதிகமாகக் கடமையாற்ற பொலிஸ் சுப்பிரிண்டன்ட் ஒழுங்கு செய்துள்ளார்.

## உள்ளே...


- உணவுப் பஞ்சத்தை நீக்க வேண்டுகோள் பக்கம் 3
- சேர். இராமநாதன் நினைவு பக்கம் 4
- சத்தியாக்கிரகம் தமிழரசுக்குழு வரவேற்பு பக்கம் 5
- பிரேரணையை அனுமதிக்க ஆளில்லை பக்கம் 6
- ஆசிரியர் இடமாற்றம் புதிய சுற்றறிக்கை பக்கம் 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### கல்வி

வகுப்புகள்:

ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்காக விசேஷ ஆங்கில வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. ஐக்கிய கலைசாலை, நெல்லியடி, கரவெட்டி /107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1494



**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
**காத்தவராயன்**



**ஸ்ரீ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ்.எஸ் ஆர். -விஜயகுமாரி
நடித்த
**நானும் ஒரு பெண்**



**மகாத்மா தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி
நடித்த
**திருவிளையாடல்**
பிரதமரின் யாழ்ப்பாண
விஜயமும் காண்பிக்கப்படும்



**REGAL—JAFFNA**
NOW SHOWING
James Stewart
Rosemary Forsyth
in
**SHENANDOAH**



**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எஸ். எஸ்.ஆர்.-விஜயகுமாரி
நடித்த
**ஆசை அலைகள்**


## வானொலி

### கொழும்பு

**வெள்ளி 18 - 11 - 66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதஸ்வரம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 நற்பாடல்கள், 7-30 கந்தர் அனுபூதி. — வேலுப்பிள்ளை, 7-45 பண்ணுரித் தமிழ், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கருவி இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 படத்திலிருந்து.

இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-15 கிராம சஞ்சிகை, 6-45 முத்தி நெறி — சைவசஞ்சிகை, 7-15 பாட்டு — ராஜலட்சுமி ஜெகநாதன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 தேர்ந்தஇசை, 10-00 நேயர்விருப்பம்.

---

## ஜி. சி. ஈ. முடிவுகள் அடுத்த வாரம்

கொழும்பு, வியாழன்

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைகள் கடந்த ஆகஸ்ட் மாதம் தோற்றிய 55,000 மாணவர்களும், அடுத்த வாரத்தில் தமது முடிவுகளை அறிவர் எனப் பரீட்சை இலாகா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மின்சாரக் கருவி உற்பத்தி

கொழும்பு, வியாழன்

மின்சார அடுப்புகள், கேத்தில்கள், துணி துவைக்கும் இயந்திரங்கள் போன்ற மற்றும்மின்சாரக் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ "அர்த்தமுள்ள நடவடிக்கைகள்" எடுக்கும்படி இலங்கை மின்சார அபிவிருத்திச் சங்கம் கைத்தொழில், மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனாவைக் கேட்டுள்ளது.

பிரபலமான தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் வர்த்தக ஸ்தாபனங்களின் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் மேற் கூறப்பட்ட மின்சாரக் கருவிகளின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டால், பெறுமதியான அந்நிய செலாவணியைச் சம்பாதிக்க உதவுமென மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் இச்சங்கம் குறிப்பிட்டுள்ளது. அத்துடன், இத்தொழிற்சாலை பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் அளிக்க உதவுமெனச் சங்கம் தெரிவித்துள்ளது.

---

## தம்பலகமம் ப.நோ.கூ. சங்க புதிய தலைவர்

திருக்கோணமலை, வியாழன்

தம்பலகமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சமாஜத்தின் புதிய தலைவராக மூழக்கறிஞர் எம். கே. செல்லராஜா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதுகாலவரை கூட்டுறவு இலாகாவே தலைவரை நியமனம் செய்துவந்தது. நேற்று முன்தினம் நடைபெற்ற சமாஜ வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய தலைவர் தெரிவு நடைபெற்றபொழுது, கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். ஆர். ஆசீர்வாதம் பேசுகையில், சங்க உறுப்பினர்கள் மத்தியில் இருந்து புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

புதிய தலைவராக திரு. ஏ. சிவசுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டார்.


## விளம்பரம்

### விளம்பரம்

மூளாய் ஐக்கிய ஆங்கில வைத்தியசாலை வளவுக்குள் நின்று 1966 ஆம் கார்த்திகை மீ 24ம் திகதி 9 மணியளவில் வைத்தியசாலைக்குரிய கீழே குறிக்கப்பட்டிருக்கும் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.

பொருட்கள்வாங்குவோர் உடன் பணம் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**பொருட்கள்**

1. 1/2 கலன் வெற்றுப் போத்தல்கள்
2. பல தனிசான வெற்றுப் பெட்டிகள்
3. 46 கலன் வெற்றுத் தகரங்கள்
4. பழைய தண்ணீர் ராங்குகள்
5. டீசல் என்ஜின் றேடியேற்றர்
6. டீசல் எஞ்சின் எண்ணை ராங்
7. புது பெற்றோல் மாக்கல் (விளக்குகள்)
8. பழம் றிபிறிக் கேற்றேஸ் (ஐஸ்பெட்டி)
9. இரும்புக் கட்டில் கால்கள் (பலகைக்கட்டில்)
10. மற்றும் சாமான்கள்

கௌரவ காரியதரிசி

1388

### அறிவித்தல்

பிரபல ஆயுள்வேத டாக்டரும் நாடிப் பரீட்சை நிபுணரும், யாழ்ப்பாணம் ஐ. தே. கட்சிச் செயலாளருமாகிய டாக்டர் அம்பலவாணர் S. A. அவர்கள் இவ்வாரம் தமிழ்நாட்டுச் சித்தமருத்துவ சங்கத்தின் அழைத்தலின் பேரில் (பாண்டிசேரி) விகார் லெட்சுமி மெடிக்கல் ஹோலால் நடத்தப்படும் மூலிகைத் தத்துவத்தால் மருந்தின்றி ரோகங்களைக் குணப்படுத்தும் ஓர் ஆராய்ச்சியில் கலந்து கொள்வார். 1389

### நீர்வேலிக் கிராமசபை அறிவித்தல்

நீர்வேலிக் கிராமசபை சித்த ஆயுள்வேத இலவச வைத்தியசாலைக்கு 1967-ம் ஆண்டுக்குத் தேவையான சித்தஆயுள்வேத முறைப்படி தயார் செய்யப்பட்ட மருந்து வகைகளும், செந்தூரம், லேகியம், சூரணம், பஸ்பம் முதலியனவும், எண்ணை வகைகள், தயில வகைகள், தலை இடிப்பசம், புண் மருந்து வகைகள், ஆசவம், அரிஸ்டம், கசாயம், கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி மற்றும் மருந்துச் சரக்கு முதலியனவும் விநியோகிக்க விரும்புவோர் தங்களின் விலைப்பட்டியலை நீர்வேலிக் கிராமசபைத் தலைவர் அவர்கட்கு 2-12-66 திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். குறித்த திகதிக்குப்பின் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இங்ஙனம்,
க. குலசிங்கம்
தலைவர்.
கி. ச. நீர்வேலி.

எமது இல. வி. சி. என்.64,
கிராமசபை அலுவலகம்,
நீர்வேலி,
16-11-66. 1390

### மானிப்பாய் இந்துக்கல்லூரி
### க. பொ. த. (உயர்தரம்) முதலாம் வருடம் 1967
### கலை - விஞ்ஞானப் பகுதிகள்

மேற்படி வகுப்புக்களிற் சேர விரும்பும் மாணவர்கள் உரிய விண்ணப்பப்பத்திரத்தில் 30-12-66க்கு முன் அதிபருக்கு விண்ணப்பிக்கவும். தூயகணிதம், பிரயோக கணிதங்களுடன் கலைப்பிரிவுப் பாடங்கள் எடுக்கும் மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர். 1387


## ரயில் பிரயாணிகளை ஆட்டிவைத்த பாம்பாட்டி

யாழ்ப்பாணம், வியா

நேற்று கொழும்பிலிருந்து வந்தயாழ்தேவியில் 1 பெட்டியில்பிரயாணிகள் எல்லோரும் சீட்டின்மேல் நின்று கொண்டு பிரயாணம் செய்தார்கள். இதற்குக்காரணம் அதேவண்டியில் பிரயாணம் செய்த பாம்பாட்டியின் பெட்டியிலிருந்து ஒரு நாகபாம்பு சொல்லிக்கொள்ளாமல் வெளியேறியதுதான்.

வண்டியில் ஏறிய அந்தப் பாம்பாட்டி, பெட்டியைத் தனதுகாலடியில் வைத்திருந்ததாகவும். கண்டியில் பார்த்தபொழுது பெட்டியின் மூடி விலகியிருந்ததாகவும், அதற்குள்ளிருந்த நாகபாம்பு வெளியில் சென்றுவிட்டதாக அவர் கூறியதாகவும் இதைத்தொடர்ந்து, அப்பெட்டியில் நித்திரைசெய்து கொண்டிருந்தசிலபிரயாணிகளும், திடீரென எழுந்து சீட்டின்மீது ஏறிநின்று பிரயாணம் செய்தார்களென்றும் தெரியவருகிறது.

அப்பெட்டி முழுவதும் பாம்பாட்டியும், பிரயாணிகளும் தேடியும், நாகபாம்பு அகப்படவில்லை. கடைசியில் அந்தப்பாம்பாட்டி வெறும் பெட்டியுடன் கொடிகாமம் புகையிரதநிலையத்தில் இறங்கிச்சென்றார்.

## கொழும்பு நகரில் டாக்ஸி மீட்டர் மோசடி

கொழும்பு, வியா.

கொழும்பு நகரிலுள்ள டாக்ஸிகளில் 60 சதவீதத்துக்கும் மேலாக மோசடி செய்யப்பட்ட மீட்டர்களையே கொண்டுள்ளதாகப் போக்குவரத்துப் பொலிசைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். சில டாக்ஸிகள் மைலுக்கு ரூ. 1·20 கூடக் காட்டுகிறதாம்.

இந்த விதமான போக்குவரத்துக் களவைத் தடுத்து நிறுத்தப் பொலிசாருக்குப் போதிய அதிகாரங்கள் இல்லையெனவும், மோட்டார் போக்குவரத்து மசோதாவில் சில ஓட்டைகள் உள்ளதாகவும் தெரிகிறது.

எல்லாமாக 3,210 பதிவு செய்யப்பட்ட டாக்ஸிகள் உள்ளதாக மோட்டார் கொமிஷனரின் இலாகாப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். மோட்டார் போக்குவரத்து மசோதா [illegible] தனிப்பட்ட [illegible] எதுவும் இல்லை. 'வாடகைக் கார்கள்' என்ற பொது அடைமொழிக்குள் தான் டாக்ஸிகளும் அடங்கும்.

இலாகாவைச் சேர்ந்த இரு உத்தியோகத்தர்கள் டாக்ஸி மீட்டர்களின் மோசடி செய்யும் முறைகளுக்கு எதிராக என்ன நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன வென்பதைஅறிவதற்காக பம்பாய்க்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அரசாங்க வர்த்தமானியில் 1952-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட மோட்டார் போக்குவரத்துச் சட்டங்களில் தெரிவித்தபடி, காலை 6 மணியிலிருந்து இரவு 9 மணிவரை மைலுக்கு 60 சதமும், இரவு 9 மணியிலிருந்து காலை 6 மணிவரை மைலுக்கு 90 சதமும் டாக்ஸிக் கட்டணங்களாக நிர்ணயிக்கப் பட்டது; என்றாலும், இதுவரை, இச்சட்டங்களை அமுல் நடத்த எதுவும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

## 10,900 கடிதங்கள்

கொழும்பு, வியாழன்

பள்ளிக்கூடங்களுக்குத் தங்கள் பிள்ளைகளுக்கு அனுமதி கோரித் தோல்வியுற்ற பெற்றோர்களுக்குக் கொழும்புப் பகுதிக் கல்வி டைரக்டர் திரு. எம் பி. நூர்தீன் சுமார் 10,900 கடிதங்கள் எழுதியுள்ளார்.


கடிதங்களின்தொடர்பைக் கொண்டு, அதே தொகைப் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் இன்னும் அனுமதி கோரி வருவதைக் கணிக்கக் கூடாது என்றும், வெவ்வேறு பள்ளிக்கூடங்களுக்கு அனுமதி கோரிய பெற்றோர் ஒருவருக்குச் சில சமயங்களில் மூன்று, நான்கு கடிதங்கள் அனுப்பப்பட்டதாகவும் கல்வி இலாகா பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.


**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**



**2வது வெற்றி வாரம்!**

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) |
| மொடேர்ண் (பண்டாரவளை) | மொடேர்ண் (பதுளை) | விஜிதா (ஹட்டன்) |



**சிவாஜி கணேசன், தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
**ஆண்டவன் கட்டளை**
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பட்டினியால் இந்தியன் சாவதை அனுமதிக்கக்கூடாது உண்ணும் உணவில் சிறிது குறைத்துக்கொள்ளுங்கள்"

## பிரதமர் இந்திராவின் உருக்கமான வேண்டுகோள்

புதுடில்லி, நவ. 17

'இந்தியன் ஒருவன் பட்டினியால் இறந்து போவதைக் காட்டிலும் ஒவ்வொரு இந்தியனும் தான் உண்ணும் உணவில் கொஞ்சம் குறைத்துக் கொள்வது மிகவும் நல்லதாக இருக்கும்.'

இவ்வாறு பாரதப்பிரதமர் திருமதி இந்திரா வேண்டுகோள் விடுத்துள்ளார். பாரதமக்களுக்கு நேற்றிரவு விடுத்த செய்தி யொன்றிலேயே பிரதமர் இந்திரா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எண்ணிலடங்கா மக்கள் வரட்சி காரணமாக உணவு முதலிய பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் வேளையில் பந்துகளுக்கும் வேலை நிறுத்தங்களுக்கும் இடமளிப்பது அர்த்தமற்றது எனத் தெரிவித்து அவர் மேலும் கூறியதாவது:-

தேசிய பாதுகாப்புக்காக கொள்ளை லாபம் அடிப்பவர்களையும் பதுக்கல்களில் ஈடுபடுபவர்களையும் தண்டிப்பது அவசியமாக இருக்கின்றது. நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது தேசிய நலனைக் கருதும் ஒவ்வொருவரும் மிகுந்த கண் காணிப்புடன் இருந்து கொள்ள வேண்டும். வேலையிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டவர்கள், மாதர்கள் ஆகியோர் இவ்வித நாட்டின் பணியில் தமது கடமையை உணர் செயலாற்ற முன்வர வேண்டும். கஷ்டப்படும் ராஜ்யங்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் தன்னாலான நடவடிக்கை மேற் கொள்ளும் என்றும் திருமதி இந்திரா தெரிவித்தார்.

## ஐ. நா. கட்டிடத்தில் தீப்பிடித்தது

ஐ. நா., நியூயோர்க், நவ. 17

ஐ. நா. கட்டிடத்தின் ஒரு பகுதியில் நேற்று தீப்பற்றிக் கொண்டதால் 10 லட்சம் டாலர் (45 லட்சம் ரூபா) வரையான சேதம் ஏற்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் காரியாலயம் இயங்கிவரும் பகுதியே தீயினால் சேதப்படுத்தப்பட்ட பகுதியாகத் தெரிகிறது.

உயிர்ச்சேதம் எதுவுமில்லை என்று அறிவிக்கப் பட்டது.

## 1557 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

மாஸ்கோ, நவ. 17.

வியட்னாம் போரில் இது வரை 1557 அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக இங்கு அறிவிக்கப்பட்டது.

வடவியட்னாம் மக்களுக்கு தொடர்ந்து ரஷ்யா ஆதரவு அளித்து வரும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## அசோக் மேத்தாவை எதிர்த்து மதுலிமாயி

நாகபுரி, நவ 17

திட்டமந்திரி அசோக் மேத்தாவை எதிர்த்து சம்யுக்தசோஷலிஸ்ட் கட்சித்தலைவர்களில் ஒருவரான மதுலிமாயி தேர்தலில் போட்டியிடவிருக்கிறார்.

## விளைச்சலைப்பெருக்கும் மின்னியக்கமுறை

லண்டன், நவ. 17

தாவர விதைகளுக்கு மின்னியக்கமூட்டும் ஒரு நவீனமுறையை பிரிட்டிஷ் விஞ்ஞானி ஒருவர் கண்டு பிடித்திருக்கிறார். இந்தப் புதிய முறையை அனுஷ்டித்து பயிர்களின் வளர்ச்சி வேகத்தையும் அவற்றின் விளைச்சலையும் சுமார் 20 விகிதம் வரை பெருக்கலாம்.

இந்தப் புதிய கண்டு பிடிப்பை நிலைநாட்டியவர் கேம்றிஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் எச். ஹேர்ஸ்டாகும். இந்தப் புதியமுறை என்னவென்பதை அவர் இன்னும் வெளியிடவில்லை. இவரது இப்புதியமுறை விதைகளுக்கு மின் அதிர்ச்சியூட்டுவதாக இருக்கவேண்டுமென நம்பப் படுகிறது.

இந்தப் புதிய மின்னியக்க முறை மூலம் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை சமீபத்தில் விவசாய நிபுணர்களுக்கு காண்பிக்கப்பட்டது. டாக்டர் ஹேர்ஸ்ட் தமது புதிய முறையை அனுஷ்டித்து விதைத்த கோதுமைப் பயிர்கள் செழிப்பு மிக்கதாய், தானிய மணிகள் பருத்து கனதியுடையதாக இருந்தன. இதற்கு சமீபமாக இம்முறை அனுஷ்டிக்கப் படாது விதைத்த பயிர்கள் சக்திகுன்றி, செழிப்பற்றதாய் இருந்தன.

கோதுமை மட்டுமன்றி மரக்கறிவகைகள், அரிசி, தெயிலை போன்றவற்றிற்கும் மின்னியக்கமூட்டி அவற்றின் விளைச்சலைப் பெருக்குவது சாத்தியமென டாக்டர் ஹேர்ஸ்ட் கூறுகிறார்.

## மாணவர் ஊர்வலம் நடத்த தடை

புதுடில்லி, நவ. 17

மாணவர்கள் நாளை நடத்தவிருந்த ஊர்வலத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சென்ற 7-ந் திகதி மாணவர்கள் நடத்திய ஊர்வலத்தின் காரணமாக பொது ஜனங்களுக்குப் பெரும் இடையூறுகள் ஏற்பட்டதாகவும் பொதுச்சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டதாகவும் இதனைக் கருத்திற் கொண்டு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவே மாணவர்கள் ஊர்வலம் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டமைச்சர் திரு. சவான் தெரிவித்துள்ளார்.

மாணவர் தமக்கிருக்கும் கஷ்டங்களை அரசாங்கத்துடன் நேரடித் தொடர்பு கொண்டு தீர்த்துக்கொள்வதுதான் முறையானதென்றும் அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

நாளை புதுடில்லியிலுள்ள பல்கலைக்கழகங்களும் பாடசாலைகளும் மூடப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேல் தாக்குதலுக்கு 4 வல்லரசுகள் கண்டனம்

ஐ நா. (நியூயோர்க்) நவ 17

சென்ற 14-ம் திகதி இஸ்ரேல், ஜோர்டானைத் தாக்கியதற்கு ஜோர்டான் ஐ. நா. வில் பலத்த கண்டனம் தெரிவித்தது. இஸ்ரேலுக்கெதிராக ஐ. நா. கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்கப்பட்டது.

இஸ்ரேலின் தாக்குதலை பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் கண்டித்தன.

நீண்டகாலப் பரிசிலனையின்பின்பே தாம் இவ்வித தாக்குதலைச் செய்யவேண்டி நேரிட்டதாக இஸ்ரேல்பிரதிநிதி தெரிவித்தார்.

## கொலைக்குற்றம்

ஆக்ரா, நவ. 17

இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவிப்பதில் பங்கு கொண்டவரெனக் கருதப்படும் டாக்டர் ஹோஸ்ட்ஸ்கூமன் காளுவிலிருந்து நாடுகடத்தப்பட்டுள்ளார். 80,000 தொடக்கம் 120,000 வரைமனநோயாளிகளைக் கொல்வதைத் தாம் மேற்பார்வை செய்ததாக அவர்தெரிவித்தார். மேற்கு ஜெர்மனியில் இவர் விசாரிக்கப்பட இருக்கிறார். (பி. டி. ஐ.)

ஐ. நா. வில்

## பார்மோசாவை நீக்கி சீனாவை சேர்க்கவேண்டும்

### 10 நாடுகள் கோரிக்கை

ஐ. நா. (நியூயோர்க்), நவ. 17

ஐ. நா. வில் பார்மோசாவை நீக்கி சீனாவைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென 10 நாடுகள் கோரிக்கை சமர்ப்பித்துள்ளன.

நைஜீரியா சீனாவை ஐ. நா. விக்சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும் அப்படி சேர்க்கவில்லையானால் போர் அபாயம் உலகில் குறையுமென்றும் கருத்துத் தெரிவித்துள்ளது.

## ஜோன்ஸன் குணமடைகிறார்

வாஷிங்டன், நவ 17

நேற்று நடைபெற்ற சத்திர சிகிச்சைக்குப்பின்னர் அமெரிக்க ஜனாதிபதியின் உடல்நிலை திருப்திகரமாக இருந்ததாக டாக்டர்கள் அறிவித்துள்ளனர்.

ஜோன்ஸன் நேற்று கடற்படை ஆஸ்பத்திரியில் தொண்டையிலும் வயிற்றிலும் சத்திரசிகிச்சை செய்துகொண்டார்.

## டீன் ரஸ்க் எச்சரிக்கை

வாஷிங்டன், நவ. 17

கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பு வியட்னாமில் வெற்றிபெறுமானால் அத்தகைய வெற்றியின் பேராபத்தும், ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பும் உள்ளடங்கியிருப்பதுடன் காலகெதியில் பெரும் யுத்தம் மூளுமென்றும் அமெரிக்க ராஜாங்க காரியதரிசி டீன் ரஸ்க் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க மாநிலப் பல்கலைக்கழகங்கள், நிலமானிய கல்லூரி கூட்டமொன்றில் பேசுவதற்கு தயாரித்த உரையொன்றில் ராஜாங்க காரியதரிசி "தென்வியட்னாமில் மேற்கொள்ளும் தாக்குதல் சோதனைக்குரிய தொன்று" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## 'ஆதரவு போதாது'

புதுடில்லி, நவ. 17

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் அளித்துவரும் ஆதரவு போதாதென்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களுக்குக் கடும் நிபந்தனை விதிப்பதுகூடாது என்றும் இந்தியநிதி மந்திரி திரு. சச்சிந்திர்சவுத்திரி சர்வதேச பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

## லண்டனில் காந்திஜி சிலை

லண்டன், நவ. 17

அடுத்த வருடத்தில் மகாத்மா காந்தியின் உருவச்சிலை லண்டனில் பிரதான இடத்தில் நிறுவப்படவிருக்கிறது. இச்சிலைக்காக பிரிட்டன் 84 ஆயிரம் ரூபா உதவி வழங்கியுள்ளது.

## விஞ்ஞானிகள் மாநாடு

சிட்னி, நவ. 17

அவுஸ்திரேலியாவில் அடுத்த வருடம் உலகின் தலைசிறந்த 30 விஞ்ஞானிகள் மாநாட்டில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். தென் கிழக்கு ஆசிய அபிவிருத்திக்கான திட்டமொன்றை இவர்கள் தயாரிப்பார்கள். (பி. டி. ஐ.)

## தேசிய உணவு பட்ஜட்

புதுடில்லி, நவ. 17

தேசிய உணவு பட்ஜட் ஒன்றைத் தயாரிக்கவிருப்பதாகப் பிரதமர் இந்திரா அறிவித்துள்ளார்.

இது பல ராஜ்யங்களில் உணவு நெருக்கடியை ஓரளவு சமாளிக்க உதவும் எனக் கருதப்படுகிறது.

இந்தப் பட்ஜட் தயாரிக்கப்படும்போது சகல ராஜ்யங்களின் முதல் மந்திரிகளும் பிரசன்னமாயிருப்பார்கள்.

## திருக்குர் ஆன் வாசிப்பு போட்டி

கோலாலம்பூர், நவ. 17

டிசம்பர் 31 லும் ஜனவரி 1-ம் திகதிகளில் கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் சர்வதேச திருக்குர் ஆன் வாசிப்புப் போட்டியில் குறைந்தது ஒன்பது வெளி நாடுகளாவது பங்குபற்றுமென இங்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், புருனெஸ், தாய்லாந்து, தென்வியட்னாம், பிலிப்பைன்ஸ், கம்போடியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளே அவ்வொன்பது நாடுகளுமாகும்.

பாகிஸ்தான், ஈரான், நைஜீரியா, துருக்கி, தான்ஸானியா ஆகிய நாடுகளிடமிருந்து அழைப்புக்கான பதில் எதிர்பார்க்கப்படுகிறது. (பி. டி. ஐ.)

## டாக்டர்கள் வேலை நிறுத்தம்

அதென்ஸ், நவ. 17

இங்குள்ள ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் 1,000 டாக்டர்கள் 48 மணித்தியால வேலை நிறுத்தத்தில் இறங்கியதன் விளைவாக, நோயாளிகள் மருத்துவ சிகிச்சை பெற வழியின்றி அவதிப்படுகின்றனர். தமது தகுதி, ஓய்வுக்காலச் சம்பளம் ஆகியவற்றை நிர்ணயிக்கும் சட்டமொன்று நிறைவேற்றச் செய்யவே இவர்கள் இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். (பி. டி. ஐ.)

## தாய்லாந்து அரிசி தடை நீங்கும்

பாங்கொக், நவ. 17

தாய்லாந்தில் அரிசி ஏற்றுமதிக்கே விதிக்கப்பட்டுள்ள தடையை அடுத்த பெப்ரவரியில் அரசாங்கம் நீக்கிவிடலாமென தாய்லாந்த உள்நாட்டு மந்திரி ஜெனரல் பிரபாஸ் சருசத்தியேன் இன்று தெரிவித்தார். புதிய அரிசி அறுவடை சந்தையில் பெருந்தொகையாகவந்து சேர்ந்ததும் தடைநீக்கப்படுமென அவர் அறிவித்தார்.

## 4 ஊர்கள் வெள்ளத்தில்

சென்னை, நவ. 17

பேய்மழை காரணமாக பாண்டிச்சேரியில் 4 ஊர்கள் வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன. 50 ஆயிரம் பேர் வீடிழந்து தவிக்கின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நாம் வாழ்வதற்கு ஒரே நியாயந்தான் உண்டு. அதுதான் சத்தியத்திற்கு நம்மை அர்ப்பணித்தல்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Postbox [illegible]
Telegrams : EELANADU Jaffna; Telephone [illegible]

[illegible] பராபவ ஆண்டு கார்த்திகை மீ 3 உ. (18-11-66)


## நீடிக்கும் வேலைநிறுத்தம்

கொழும்பில் இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள் ஆரம்பித்த வேலைநிறுத்தம் பதினேழு தினங்களுக்கு மேலாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. கொழும்புத்துறைமுகத்திலுள்ள வர்த்தக சிப்பந்திகள் சங்க அங்கத்தவர்களும் நேற்று முதல் வேலைநிறுத்தம் ஆரம்பித்துள்ளனர். திருக்கோணமலைத் துறைமுகத்தில் வேலைநிறுத்தம் நீடித்து வேலைநிறுத்தம் செய்த ஊழியர்கள் வேலை நீக்க அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளனர். இந்த வேலைநிறுத்தங்களினால் இதுவரை பல லட்சம் ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளது. இதர ஸ்தாபனங்களிலும் வேலைநிறுத்தம் பரவக்கூடிய அறிகுறிகள் தோன்றுகின்றன. நாட்டின் பொருளாதார நிலை சீர்குலைந்துள்ள இச்சமயத்தில் வேலை நிறுத்தங்கள் நீடிப்பதும் பரவுவதும் நிலைமையை மோசமாக்கி நாட்டுக்கும் மக்களுக்கும் சொல்லொணாக் கஷ்டங்களை ஏற்படுத்தக்கூடும். அரசாங்கமும் முதலாளி, தொழிலாளர் ஸ்தாபனங்களும் இனியும் இது விஷயத்தில் தாமதம் செய்வது தற்கொலைக்கொப்பானது.

வர்த்தக சிப்பந்திகளின் வேலைநிறுத்தத்தைச் சமாளிப்பதற்கு தொழில் அமைச்சர் சமர்ப்பித்த திட்டமொன்றை வர்த்தக சிப்பந்திகள் சங்கம் ஏற்றுக் கொண்டுவிட்டது. முதலாளிமார் சம்மேளனம் ஏற்க மறுத்துவிட்டது. இத்திட்டத்தை ஏற்பதால் அதன் விளைவுகள் வேறுவிதமாக இருக்கும் என சம்மேளனம் கருதுகிறது.

வேலைநிறுத்தங்கள் நீடிப்பதும் பரவுவதும் முதலாளிமாருக்கும் அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் ஏற்படக்கூடிய விளைவுகளையும் சம்மேளனம் கருத்திற் கொள்ள வேண்டும். முதலாளி தொழிலாளி நல்லுறவில்தான் நாட்டின் வாழ்வு தங்கியிருக்கிறது. விலைவாசி உயர்வுக்கும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டுக்கும் முதலாளிமாரே முக்கிய காரணமென்ற அபிப்பிராயம் சரியாகவோ, தவறாகவோ நாட்டின் மக்கள் மனதில் நிலவுகிறது. இந்நிலையில் தொழில் அமைச்சரின் சமரசத் திட்டத்தை ஏற்க மறுத்து வேலைநிறுத்தம் நீடிக்க அனுமதிப்பது மேலும் தப்பெண்ணத்தை வளர்க்க உதவும்.

சமரசத் திட்டத்தைத் தொழிலாளர் மறுத்திருந்தால் கடும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்குமென்றும், முதலாளிமார் நிராகரித்ததால் தயங்குகிறதென்றும் தொழிலாளர் மத்தியில் அபிப்பிராயம் நிலவுகிறது. அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் சங்கடமான நிலைமையை ஏற்படுத்தாமல் விரைவில் முதலாளிமார் சம்மேளனம் நல்லதொரு முடிவுக்கு வந்து நாட்டின் பொருளாதார நிலைமை மேலும் மோசமடையாது தடுக்க முன்வரவேண்டும்.

## செய்யவேண்டிய பணி

தீண்டாமைக் கொடுமையை ஒழித்துக்கட்டும் நோக்கத்துடன் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினர் இன்று ஆரம்பிக்கவிருந்த சத்தியாக்கிரகம் ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. சத்தியாக்கிரகம் மட்டும் ஒத்திவைக்கப்படவில்லை; நாட்டின் அமைதிக்கு ஏற்படவிருந்த பங்கமும், தமிழ் சமூகத்துக்குள் தோன்றவிருந்த பிளவும் கசப்பும்கூட ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. இந்த நல்ல காரியத்துக்குக் காரணமாக இருந்தவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். நிரந்தர சமாதானமும் நியாயமான உறவும் நிலவ தொடர்ந்து முயற்சி செய்யப்பட வேண்டும்.

சத்தியாக்கிரக இயக்கம் மூன்று மாதங்களுக்குத்தான் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் செய்யவேண்டிய பணிகள் பலவுள. தீண்டாமைக் கொடுமை இந்துசமூகத்தில்தான் பெருமளவு நிலவுகிறது. இக் கொடுமையை நீக்க இந்துசமூகத்தவரே முன்வரவேண்டும். தீண்டாமைக் கொடுமையை நீக்க வேண்டுமென விரும்பும் பிற சமூகத்தவர் மறைமுகமான தார்மீக ஆதரவு கொடுப்பதே நல்லது.

இதுதவிர அரசியல் கட்சிகளும்கூட சமூகத்தில் மக்கள் மத்தியில் இதுமாற்றப் பணியாற்றுவது, கட்சி அரசியல் காரணமாக வேறுபட்டுநிற்கும் நம்நாட்டில் பிரச்னைகளுக்கு சுமுகமான தீர்வு காண்பதற்குப் பதிலாக கடினமாக்கக்கூடும். அரசியல் கட்சிகள் சட்டரீதியான நடவடிக்கைகளை பார்லிமெண்டில் செய்து கொள்வதோடு நிற்பது சிறந்தது. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ஆலயம் தர்மகர்த்தாக்களையும் இந்துசமயத் தலைவர்களையும் சந்தித்து ஒரு நல்ல முடிவு காணமுன்வந்திருக்கிறார். அவருக்கு சமய, சமூகத் தலைவர்களும் சிறுபான்மை தமிழர் இயக்கங்களும் உதவியும், ஒத்துழைப்பும் அளித்தால் மனக்கசப்பு எதுவுமின்றி தீண்டாமைக் கொடுமை படிப்படியாக நீங்க வழி பிறக்கும். சிறுபான்மைத் தமிழர் இயக்கத்தினரும், தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க விரும்புவோரின் ஆதரவையும் நல்லெண்ணத்தையும் பெற்று இதரமக்கள் மத்தியிலும் தங்கள் சொல்லாலும், செயலாலும் மனமாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்யவேண்டும்.

# 19-ம் நூற்றாண்டு கண்ட மாமேதை சேர் இராமநாதன்

— க. சி. குலரத்தினம் —

**சேர். பொன் இராமநாதன் நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. இதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய மகாமேதைகளுள் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களும் ஒருவர். அவர் என்னவாயிருந்தவர் என்றும், என்ன செய்தாரென்றும் அவர் எப்படியான மனிதன் என்றும் இன்றுவரை எத்தனையோ பெரியார்கள் அறிய முற்பட்டும் அவரை இன்ன தன்மையினரென எடுத்தியம்ப இயலாது இடர்ப்பட்டுள்ளார்கள். அவர் எல்லாமாய் வாழ்ந்தஓர் அதிசய மனிதன் என்றே கருதக்கூடியதாக இருக்கிறது.

கல்விமான், இலக்கிய விற்பன்னர், தத்துவ சாதிதி, ஞானவான். இராசதந்திரி, சீர்திருத்தவாதி, வழக்கறிஞன், சட்ட அறிஞர் நாயகம், சட்டத்துறை நாயகம், சட்ட சபைப் பிரதிநிதி, மக்கள் தலைவன், பரோபகாரி, தாதா, சிந்தனையாளர் என்றெல்லாம் இராமநாதனைப் பற்றித் தனித்தனியாக நூல்கள் எழுதலாம். அவர் புலவர் போற்றும் புரவலராயும் வாழ்ந்து நாட்டுக்கும், மொழிக்கும், சமயத்துக்கும் அயராதுழைத்த ஒரு மகான். அவரைப் போல இன்னொரு பெரியாரை இன்றும் கண்டிலேம் எனப் பெரியவர்கள் கூறுவது முற்றிலும் உண்மை.

இராமநாதன் அவர்கள் சட்டசபையை அலங்கரித்த காலத்தில் இலங்கையருக்காகச் செய்து நிறைவேற்றிய சேவைகள் அளப்பரியவை. அவை சாதி, சமய, மொழி வேறுபாடு கருதாமல் இலங்கைவாழ் பொதுமக்களுக்குச் சேவையென்ற மனோபாவத்துடனேயே செய்யப்பட்டன. அவர் கொண்டு வந்த மாற்றங்கள், சட்டங்கள் சட்டங்கள் என்பனவும் பிறவும் மாற்றியமைக்கப்பட்டமை மிகவும் அரிதாகவேயுள்ளன. நீதிமன்றங்களில் திருத்தங்கள், பதிவுகள், சட்டங்கள் சட்டப்பதிவுகள், ஆளுரிமைப் பதிவுகள், தபாற்கந்தோர் சேமிப்பு வசதிகள் ஆகியவும் பிறவும் இராமநாதன் அவர்கள் ஆரம்பத்தில் செய்த சேவைகளின் பாற்படும்.

இவைகள் எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கைச் சட்டங்களின் கோவைத் தொகுப்பிலேயே இராமநாதனுடைய விவேகம் அதிகமாக விளங்குகிறது. சேர் யோன் பியர் என்ற ஆங்கிலேயர் தலைமையில் கூடிய சட்டத் தொகுப்புக்குழுவில் சேர் சாமுவேல் கிறனியர், வான்லங்கன்பாக் ஆகியோரும் இருந்தார்கள். எனினும் இராமநாதன் அவர்களே அதில் அதிகமாக உழைத்தார் என்பர்.

இலங்கைவாழ் தமிழருக்கும், சோனகருக்கும் பிரதிநிதியான இராமநாதன் அவர்கள் இலங்கையர் யாவருக்கும் நன்மை உண்டாகக்கூடிய அளவில் சட்டசபையில் தொண்டுசெய்தார். அவருடைய சேவையைப் பாராட்டுமுகமாகப் பிரித்தானிய அரசாங்கம் அவருக்கு 1889ம் ஆண்டிலே C.M.G. என்ற பட்டத்தை வழங்கிற்று. பின்னர் 1903ம் ஆண்டில் K.C. பட்டமளித்துக் கௌரவித்தது.

சட்டசபையில் இராமநாதன் அவர்களுடைய பேச்சுக்குத் தனிமதிப்பு இருந்தது. ஐரோப்பியர் தமது [illegible]களில் இருந்த இராமநாதனுடைய ஆற்றொழுக்குப் போன்ற பேச்சை வெகுவாக இரசிப்பது வழக்கம். ஐரோப்பிய அங்கத்தவரான கிறிவிரி என்பாருடன் இராமநாதன் விவாதிப்பது பெரிய இலக்கிய இரசனை போல இருந்ததென்பர். அதிலே உயிர் இருந்ததாகவும் கூறுவர். அவர் இறைசேரித் தலைவர் ஒபிரயனுடன் சொற்போர் தொடுத்ததை அறிந்த ஆங்கிலேயர் இராமநாதனை உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளின் ஒப்புயர்வற்ற பெரிய தலைவன் எனப் பாராட்டிப் புகழ்ந்தனர்.

இலங்கையில் 1915ம் ஆண்டிலே சிங்களவருக்கும் சோனகருக்கும் இடையில் நடைபெற்ற பெரிய வகுப்புக் கலவரம் வெள்ளைக்காரரையே ஒரு கலக்குக்கலக்கிவிட்டது. அது ஏதோ 1857ம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற்ற கலகம் போன்றதாகலாம் என எண்ணி மனக்கலக்கம் கொண்ட ஆள்பதி, பெரிய பெரிய சிங்களத் தலைவர்களைச் சிறையிலிட்டு வருத்தினார். இலங்கையர் தம் தெரியப்பெற்ற பிரதிநிதியான இராமநாதன் இங்கிலாந்துவரை சென்று மந்திரிமார்களைக் கண்டு சிங்கள மக்களைச் சிறைவிடுவித்தார். அத்திரச்செயலை அதுவும் முதலாவது மகாயுத்த காலத்திலே 'எம்டன் கப்பல்' கடலில் அட்டூழியங்கள் செய்த காலத்திலே உயிரைப் பொருட்படுத்தாது தேசமக்களுக்காகத் துணிந்து சேவை செய்தவர் வேறு யாரென்பதைச் சிங்கள மக்கள் சிந்தை மறவாத தன்மையாலே தான் அவர் இரண்டாம் முறையும் இலகுவில் இலங்கைப் பிரதிநிதியானார் போலும்.

இக்காலத்திலே தான் இலங்கைச் சர்வகலாசாலை அமைப்புக்குழு வேலைசெய்தது. இதன் தலைவராயிருந்தவர் சேர் வாக்ரர் புக்கானன் டிடல் என்ற ஆங்கிலேயர். அக்குழுவில் சேர் இராமநாதன், கௌரவ பாலசிங்கம், கௌரவ மகாதேவா ஆகிய தமிழ்ப்பெரியார் இருந்தனர்.

படித்த இலங்கையர் பிரதிநிதியாகச் சட்டசபையிலே அங்கத்துவம் வகித்த காலத்தில் இராமநாதன் செய்த

(5-ம் பக்கம் பார்க்க)

## தெய்வம் வழி விட்டாலும். . .

யாழ்ப்பாணம் மாவட்ட அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவின் உதவியால் குழந்தைகள் உட்கொள்ளும் சிலவகை பாலுணவுகள் (நெஸ்பிரே) போன்றவை தனிப்பட்ட கடைகள் சிலவற்றில் பெர்மிட்டுக்கு வழங்கப்படுகின்றன. ஆனால் சில பூசாரி தெய்வங்கள் இங்கும் வழிவிடாமல் குறுக்கே நிற்கின்றனவாம். இந்தத் தேவதைகளுக்கு என்ன விதமான பலி கொடுக்கவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும் தானே?

நண்பர் ஒருவர் ஒரு பெர்மிட்டை நீட்டி ஒரு டின் பால் தாருங்கள் என்று கேட்டார். குழந்தையின் அரிசிக் கூப்பனைக் கொண்டு வாரும் என்று கடைக்காரர் சொன்னார். அடுத்த நாள் கூப்பனோடு போனார் நண்பர். 'உம்முடைய குழந்தைக்குத்தானே பால்?' என்று கேட்டார் கடைக்காரர். 'இல்லை, என்னுடைய சகோதரனுடைய குழந்தைக்கு' என்றார் நண்பர். 'அவரிடமிருந்து ஒரு துண்டுகொண்டு வாரும்' என்றார். அடுத்த நாள் சகோதரன் கொடுத்த துண்டை நீட்டினார் நண்பர் கடைக்காரரிடம். கடைக்காரர் அதைப்பார்த்துவிட்டு "எங்கே கூப்பன்?" என்றார். நண்பர் கூப்பனை மறந்து விட்டுவந்தபடியால் முழித்தார். மூன்றும் நாள் அந்த முக்கியமான இரு கடதாசிகளையும் திரவியமெனப் பாதுகாத்துக் கொண்டுபோய் கடைக்காரர் முன்னிலையில் சமர்ப்பித்தார், எனது நண்பர். கடைக்கார முதலாளி இரண்டையும் கூர்மையாகப்பரிசிலனை செய்தபின் 'எங்கே உம்முடைய கூப்பன்?' என்று கேட்டார்.

நண்பர் இப்போது டின் பால்வாங்கும் வேலையைக் கைவிட்டு விட்டு சுத்தமான உள்ளூர் பசும் பால் தான் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு மிகவும் சிறந்தது என்று தமது சகோதரனுக்குப்பிரசாரம்செய்வதில் ஈடுபட்டுள்ளார்.

இதில் ஒரு நல்ல பாடம் இருக்கிறது.

குழந்தைகளுக்கு மிகவும் சிறந்தஉணவு தாயின் பால். இதை உலகிலுள்ள எல்லா டாக்டர்களும் ஒப்புக்கொள்வார்கள். நமது பெண்கள் முலைப்பால் ஊட்டுவது நாகரீகமற்ற செயல் என்று நினைத்ததன் பயனாகநோயாளிகள், வயோதிபர்களுக்கென்று தயாரிக்கப்பட்ட டின் பால்கள் கப்பல் கப்பலாக நம் நாட்டுக்கு வரத் தொடங்கின.

'குழந்தை அழுதால் ஒன்றரைக்கரண்டிமாவைகரைத்துக் கொடு' என்று வேலைக்காரிக்கு உத்தரவு போட்டுவிட்டு அம்மணி மாட்டினிக்குப் போய் விடுவாள்!

### நாட்டிலும் நகரிலும்

தாய்ப்பாலுக்கு அடுத்தபடியாக குழந்தைகளுக்கு சிறந்த உணவு பசுவின்பால். எந்த டாக்டராவது இதை மறுக்கட்டும் பார்ப்போம்! நமது பெண்கள் அந்த அடுப்பில்லைத்துக்காய்ச்சப்பஞ்சிப்பட்டோ அல்லது சீமையிலிருந்து அழகான பெட்டிகளில் வடிவான லேபல் போட்டு வரும் பால், பசுப்பாலைவிடசிறந்ததாய்த்தான் இருக்கவேண்டும் என்றமூடநம்பிக்கையாலோ அதை விரும்புவதில்லை. டின்களில் வரும் பாலும் மாவாக்கப்பட்ட பசுவின் பாலே என்பதையும் அவர்கள் உணர்வதில்லை.

'பசுப்பாலினால் வாய்வுச் சேட்டை அதிகம், மந்தம் பிடிக்கும்' என்று சிலர் முணுமுணுத்துக் கொள்வது என் காதில் கேட்கிறது. அத்தன்மைகளைப் போக்குவதற்கு வெந்தயம், மிளகு, சம்பு என்றுஎத்தனையோ சரக்குகள் இருக்கின்றனவல்லவா?

டின்பாலுக்குத்தட்டுப்பாடு ஏற்படும்போது தான் ஒருமுழிக்கிறீர்கள், இனிமேலாவது நாம் பசுப்பாலைக் கூடுதலாக உபயோகிக்க மாட்டோமா?

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமை ஒழிப்பில் அரசாங்க அதிபரின் முயற்சிக்கு ஆதரவு

## சத்தியாக்கிரகம்பின்போட்டதற்கு ஐக்கியமுன்னணிக்கு பாராட்டு

### தமிழரசுக் கட்சிக் குழு தீர்மானம்

யாழ்ப்பாணம், வெளி சாதிப்பாகுபாடுகளை நீக்குவதற்கு அரசாங்க அதிபர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் அளிப்பதென்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புக்குழுக்கூட்டம் குழுத் தலைவர் திரு. வ. ந. நவரத்தினம் தலைமையில் சென்ற புதன்கிழமை மாலை நடைபெற்றபோது தீர்மானிக்கப்பட்டது.

கோப்பாய் எம். பி. திரு. இ. கதிரவேற்பிள்ளையின் இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிவரும் நல்லுறவும் நல்லெண்ணமும் பங்கமடையாவண்ணம் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினரின் சத்தியாக்கிரகம் கைவிடப்படுவதை குழு வரவேற்றது.

சென்றவாரம் ஆலயப்பிரவேசம்தேநீர்க்கடைப் பிரவேசம் ஆகியஇரு விடயங்களுக்கென நியமிக்கப்பட்ட உபகுழுக்கள் எடுத்தநடவடிக்கைகள்பற்றிய அறிக்கைகளை இரண்டு வாரத்துக்கொருமுறை தமிழரசுக்கட்சியின் காரியாலயத்துக்கு சமர்ப்பிக்கவேண்டு மென்றும் ஒவ்வொரு பாராளுமன்றஉறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினர் இல்லாத தொகுதிகளில் கட்சிக்கிளைத் தலைவர்களும் இதுவிஷயமாக தத்தம்தொகுதிகளில் எடுக்கப்படும் முயற்சிகளைப் பற்றியவிபரங்களைசமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புக் குழுச் செயலாளர் தமிழரசுக்கட்சி காரியாலயத்திற்கு மூன்றுவாரங்களுள் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், இதுவிடயமாய் அரசாங்க அதிபர் பிரச்சினைகளை அமைதியாகவும், ஒற்றுமையாகவும் தீர்த்து வைப்பது பற்றி எடுக்கும்முயற்சிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் நன்றிபாராட்டுவதுடன் எங்கள் ஒத்துழைப்பு இடைக்குமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவாளர்கள் செ. தனபாலசிங்கம், மு வைரமுத்து ஆகியோர் சிறுபான்மைத் தமிழர்கள் பிரசனையைத் தீர்த்து வைக்கும்முயற்சியில் ஈடுபட்டிருப்பதற்கு பாராட்டுத்தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 19ம் நூற்றாண்டு கண்ட...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகளை இன்றுந்தான் சிங்கள மக்கள் வெகுவாகப் பாராட்டுகிறார்கள். சட்டசபையின் 1914ம் ஆண்டின் வைகளின்போது பல முறிகள் விவாதிக்கப்பட்ட போது உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் பலரும் நியமன அங்கத்தவர்கள் சிலரும் வெளியேறிவிட்டார்கள். ஆனால் இராமநாதன் மாத்திரம் தமது ஆசனத்தில் ஆடாமல் அசையாமல் இருந்தார். அவருடைய நண்பர்கள் அவரிடம் ஏன் நீங்கள் வெளியேறாமல் இங்கே இருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு "நான் இங்கே இருப்பது இங்கே எடுக்கப்படும் ஒவ்வொரு முறியையும் எதிர்த்து வாக்களிப்பதற்காக. நான் வெளியேறினால் முறிகள் எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டவை என்றல்லவா பதியப்படும்" என்றார்.

இராமநாதன் அவர்கள் 50 ஆண்டுகள் சட்டசபை அங்கத்தவராய் இருந்தார் என்பதை அறியும்போது இறும்பூதெய்தாதவர் இருக்கமாட்டார். அவர் சட்டசபையில் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவராயும், உத்தியோக அங்கத்தவராயும், நியமன அங்கத்தவராயும், தெரியப்பட்ட அங்கத்தவராயும் இருந்தார்கள். இன்று இலங்கையில் 145 தேர்தல் தொகுதிகள் உண்டு. தொகுதிகள் தோறும் தெரியப்பட்ட பிரதிநிதிகள் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் இலங்கை முழுவதும் ஒரேயொரு தொகுதியாயிருந்த காலத்தில் இலங்கையர் அனைவருடைய ஆதரவையும் பெற்று ஒப்பற்ற பிரதிநிதியாய்ச் சேவைசெய்யும் மனப்பான்மையோடு இருந்தார்.

இளமைக்காலந்தொட்டுக் இராமநாதனவர்களுக்குக் கீழைத்தேசக் கலாசாரத்திலும் சைவசித்தாந்த சமயத்திலும் பேரபிமானம் இருந்தது. அவர் சைவசித்தாந்த அறிவை விருத்தி செய்துகொள்வதற்காக வடமொழியை நன்கு கற்று அருளம்பலானந்த யோகி என்ற பெரியோரிடம் சித்தாந்த அறிவைப் பெற்றுக்கொண்டார். சைவசித்தாந்த சமயத்தை அடிப்படையாகக்கொண்டே தமது வாழ்க்கையையும் பண்படுத்திக்கொண்டார். அவர் மாணிக்கவாசகசுவாமிகளின் முத்திநெறியறியாத எனத் தொடங்கும் திருவாசகத்தை அடிக்கடி மாணவருக்குக் கூறுவது வழக்கம்.

சேர் இராமநாதன் அவர்கள் பல்லாயிரம் ரூபா செலவுசெய்து பெண்களுக்கும், ஆண்களுக்கும் என இரு கலாசாலைகளைச் சுகாதாரமுள்ள சூழலில் பெரிதாய்ப் பல வசதிகளோடு அமைத்துள்ளார்கள். இராமநாதன்கல்லூரியும், பரமேஸ்வராக் கல்லூரியும் அவருடைய புண்ணியக் கண்கள் எனக் குறிப்பிடத் தகுந்தவை. அவை யாழ்ப்பாணத்தின் கண்கள். சைவத் தமிழ்க் கண்கள். இராமநாதன் கல்லூரி 1913-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் திகதி காலை பத்துமணியளவில் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் நோக்கம் பேசப்பட்டது. சைவத்தமிழ்ப் பெண்கள் குருகுலவாசஞ் செய்து, ஞானசாத்திரம், தர்மசாத்திரம், புராணேதிகாசங்கள் பயில்வதற்கு வசதிசெய்வதென்பதே இலக்கு. திரிகரணசுத்தியும், காரியசித்தியும் அருள்வாய் என்பதே கல்லூரியின் இலச்சினை.

இத்தகைய வித்தியாசாலையை அமைத்தபின் சைவத் தமிழ்ஆசிரியைகளைப் பயிற்றுவதற்கானவோர் ஆசிரிய கலாசாலையையும் ... தார். பின்னர் ...

## ஜனத்தொகை அதிகரிப்புபற்றி அயூப்

கராச்சி, நவ. 17

"ஜனத்தொகை அதிகரிப்பு ஆசியாவை எதிர்நோக்கியுள்ள ஒரு பெரும் பிரச்சினை என்றும் இந்த நிலை இப்படியே வளர்ந்துகொண்டிருந்தால் வாழ்வதற்கு பலருக்கு இடமில்லாத நிலை ஏற்பட்டுவிடும்" எனவும் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் தெரிவித்துள்ளார்.

இங்கு நடைபெறும் கொழும்புத் திட்ட ஆலோசனை மகாநாட்டுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியிலேயே ஜனாதிபதி அயூப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இம்மகாநாட்டில் 22 நாடுகள் பங்கு கொண்டுள்ளன.

## தொகுதி. . .

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

நேர்முகப் பரீட்சை நடைபெற்றுள்ள ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டு மாவட்ட அடிப்படையில் 1-ம், 2-ம் தர தலைமையாசிரியர்களுக்குரிய காலி ஸ்தானங்கள் நிரப்பப்படல் வேண்டும்.

3-ம் தர அதிபருக்குரிய பதவி உயர்ச்சி மாவட்ட அடிப்படையில் சுயபாஷா ஆசிரியர்களுக்கும் நியாயமான அளவு வழங்கப்படல் வேண்டும்.

1962-ம் ஆண்டு முதல் இற்றைவரை பதவி உயர்வு அளிக்கப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்கு அவர்களுக்குரிய சம்பளம் மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

திருகோணமலைப் பகுதிக்கு தொழில் வழிகாட்டி ஆசிரியர்கள் நியமனம்செய்யப்படும்போது திருகோணமலையில் உள்ள தொழில் வழிகாட்டி ஆசிரிய தராதரப்பத்திரம் பெற்றவர்களுக்கே முதலிடம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

---

வேலிப் பதியிலே 1919-ம் ஆண்டில் பற்பல வேலைகளெல்லாம் பண்பெறவமைத்துப் பரமேசுவராக் கலாசாலையை ஆரம்பித்தார்.

இன்னும் கொழும்பில் உள்ள பொன்னம்பலவாணேசுரர் கோவிலின் தருமகர்த்தாவாக வந்தபின் அக்கோயிற்றிருப்பணிகளைச் சோழமன்னர் செய்த முறையில் கைதேர்ந்த சிற்பிகளைச் சோழநாட்டிலின்றும் வரவழைத்துப் பல்லாயிரம் பொன் செலவு செய்துப் புதுப்பித்துஅமைத்தார்கள். தமது ஒய்வு நேரங்களில் ஞான நூல்களைக் கற்று அவற்றுக்கு உரையும் வியாக்கியானமும் எழுதிப் பதிப்பித்தார். ஆத்திசூடி விளக்கம் முதல் பகவத்கீதை விளக்கம் வரை பல வியாக்கியானங்கள் எழுதியதோடு கிறிஸ்தவ நூலகளாகிய மத்தேயு, யோவான் சுவிசேசங்களுக்கும் பெரிய வியாக்கியானங்கள் எழுதி ஆங்கிலே ... பட ... த் தொண் ...

## 'இயற்கை வளத்தை பாதுகாப்பது அவசியம்'

### ராஜாங்க மந்திரி

கொழும்பு, வியாழன்

"இயற்கை வளத்தைப் பாதுகாப்பது அவசியம். மண், நீர், காடு, வனவிலங்குகள் இவற்றைப் பாதுகாப்பதால் நாடு பெரும் பயன் பெறக்கூடியதாக இருக்கும். நாம் இவற்றைப்பாதுகாத்து வருங்கால சந்ததியினரிடம் பக்குவமாக ஒப்படைக்க வேண்டும்".

இவ்வாறு ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்தன இன்று கொழும்பில் மண்வள பாதுகாப்பு மகாநாட்டை ஆரம்பித்துவைத்துப்பேசகையில் கூறினார்.

மண்வள பாதுகாப்பு சங்கத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இந்த மகாநாட்டில் திரு. ஜே. ஆர். மேலும் பேசுகையில் கூறியதாவது:

மண்வளத்தை தகுந்த முறையில் பாதுகாப்பதாலேயே நாம் நமக்குத் தேவையான உணவை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். நாம் இயற்கையின் பாதுகாவலர்களாக இருந்தால்தான் இயற்கையின் பயனைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

## "அசிட் வீசியதனால் கண்பார்வை குன்றியது"

### டாக்டர் சாட்சியம்

மாவிட்டபுரம், வியா.

"அற்புதத்தின் முகம் முழுவதும், அசிட் திராவகம் வீசப்பட்டதனால் ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டன. அவருடைய வலது கண்ணும் பார்வை அற்றுவிட்டது. உடனடியாக அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்திருக்காவிடில் அவரின் உயிர் பிரிந்திருக்கலாம்.

அசிட் வீசியதாகத் தொடரப்பட்ட வழக்கில் டாக்டர் எஸ். சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில், தெல்லிப்பளையைச் சேர்ந்த, சி. செல்லையா, செ. ஜெயரத்தினம், செ. நல்லம்மா, செ. அக்னஸ் ஜெயம், து. ஞானவதி ஆகியோர் அதே இடத்தைச் சேர்ந்த திருமதி பாலசிங்கம் அற்புதத்தின் மீது அசிட் வீசி அவரைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் அதே நேரத்தில், மாவிட்டபுரம் பாலசிங்கம் மீது அசிட் வீசி காயப்படுத்தியதாகவும், பாலசிங்கத்திற்கு காயமேற்படுத்திய தாகவும், குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ஆர். கண்ணுத்துரை, புறக்டர் எஸ். ஸ்ரீதரனின் அனுசரணையுடன் ஆஜரானார்.

வழக்காளி தரப்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடனும் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பேரின்பஜயசூரியாவின் உதவியுடனும் ஆஜரானார்.

மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை இம்மாதம் 28-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

---

முருகண்டியில்

## துப்பாக்கிச்சூடு; பொலிசார் விசாரணை

திருநெல்வேலி, வெள்ளி

முருகண்டியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடொன்று சம்பந்தமாக நல்லூரைச் சேர்ந்த ஒரு மோட்டார் காரையும், அதன் சாரதியையும், அதில் சம்பந்தப்பட்டவர்கள் எனக்கருதப்படுபவர்களையும் உடனடியாக விசாரணை செய்யுமாறு கிளிநொச்சிப் பொலிசார் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை முருகண்டியிலுள்ள வாடிவீடொன்றில் வைத்தியா மரியாம்பிள்ளை என்பவர் நித்திரையிலிருக்கும் போது அவர் துப்பாக்கியால் சுடப்பட்டது சம்பந்தமாகவே மேற்கண்டவர்களை உடனடியாக விசாரணைசெய்யுமாறு கிளிநொச்சிப் பொலிசார் யாழ்ப்பாணம் பொலிஸுக்கு அறிவித்துள்ளார்கள். பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

## சிப்பாய்களுடன் இளம் பெண்

பனை, வியாழன்

இயக்கச்சிக் காட்டுக்குள் 18 வயதான இளம்பெண்ணும், இரு இராணுவ வீரர்களும், பளைப் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டனர்.

இயக்கச்சிப் பகுதிக்கு ரோந்து சுற்றச் சென்ற பொலிஸார் மூவரையும் கண்டனர். பொலிஸாரைக் கண்டதும் இராணுவவீரர்களில் ஒருவர் மயக்கமடைந்து நிலத்தில் விழுந்துவிட்டார் என்று கூறப்படுகிறது.

பொலிஸார், இளம்பெண்ணையும் இராணுவவீரர்களையும் ஜீப்பில் ஏற்றிப்பளைப் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற விசாரணையின் பின்னர், அப்பெண்ணைக் கூட்டிச்சென்று அவரது கிராமத்தில் விடுமாறு, இராணுவவீரர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

இராணுவவீரர் இருவரும் அப்பெண்ணுடன் பளைப் பஸ் நிலையத்திற்கு சென்று, அங்கிருந்து பஸ்ஸில் சென்றனர்.

## பண்டாரவளை நகரசபைத் தேர்தல் டிசம்பரில் நடைபெறும்

கொஸ்லாந்தை, வியாழன்

பண்டாரவளை நகரசபைத் தேர்தல் டிசம்பர் முதல் வாரத்தில் நடைபெறவிருக்கிறது. இதற்கான நியமனப் பத்திரம் அண்மையில் பண்டாரவளை நகரசபை மண்டபத்தில் பதுளை தேர்தல் உதவிக்கமிஷனரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இரண்டு தமிழர்கள். மூன்று முஸ்லீம்கள் உட்பட 16 பேர் ஏழு ஸ்தானங்களைக் கொண்ட நகரசபைக்கு போட்டியிடுகின்றனர்.

பண்டாரவளை புதிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆர். எம். அப்புஹாமியும் 3-ம் வட்டாரத்தில் யு. என். பி. அபேட்சகரோடு போட்டியிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை பட்டினசபை நிர்வாகம் பற்றி விசாரணை செய்யக் கோரிய பிரேரணை

## அனுமதிக்க ஆளில்லாமல் கைவிடப்பட்டது

குரும்பசிட்டி, வியாழன்

காங்கேசன்துறை பட்டின சபையின் நடவடிக்கைகள் குறித்துப் பகிரங்க விசாரணை நடாத்தவேண்டுமெனவும் தேவைப்படின் இப்பட்டினசபையைக் கலைத்துவிட்டு, ஓர் விசேஷ ஆணையாளரின் நிர்வாகத்தின்கீழ் சிலகாலம் வைக்கப்படவேண்டுமெனவும் முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. க. இருபாமூர்த்தியினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை காங்கேசன்துறைப் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படாது எதுவித விவாதமுமின்றிக் கைவிடப்பட்டது. காங்கேசன்துறைப் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் திரு. ஆ. வி. சதாசிவம் தலைமையில் புதன்கிழமை மாலை, சபை சபாமண்டபத்தில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்பட்டமை குறித்து சபையின் செயலாளருக்கும் முதலாம் வட்டார உறுப்பினருக்குமிடையில் வாக்குவாதமெழுந்து கடும் வார்த்தைகளை ஒருவர்மீது ஒருவர் பிரயோகித்துக்கொண்டனர். சபைக் கூட்ட நடவடிக்கையில் செயலாளர் பங்குகொள்ள முடியாதென அங்கத்தவர்கள் எல்லோரும் ஒருமுகமாகத் தலைவருக்குச் சுட்டிக்காட்டினர். கூட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் பல சந்தர்ப்பங்களில் காரியதரிசிக்கும், முதலாம் வட்டார அங்கத்தவருக்கும் கடும் வாக்குவாதம் நிகழ்ந்து இறுதியில தாம் பிரயோகித்த கடும் வார்த்தைகளைக் காரியதரிசி வாபஸ் பெற்றுக்கொண்டதுடன், சபையில் மன்னிப்பும் கேட்டுக்கொண்டார்.

பொதுமக்கள் பலராலும் எதிர்பார்க்கப்பட்டிருந்த முதலாம் வட்டார அங்கத்தவரது பிரேரணை சபையில் பிரேரிக்கப்பட்டபோது பிரேரணையை அனுமதிக்க ஒருவரும் முன்வராதுபோனதால் விவாதத்துக்கு இடமில்லாது போய்விட்டது. எந்தவொரு பிரேரணையும் சபையில் அங்கத்தவர் ஒருவரால் பிரேரிக்கப்பட்டு, மற்றொருவரினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் தான் பிரேரணை குறித்துப் பேசவும், விவாதம் நடத்தவும் உரிமையுண்டெனத் தலைவர் கூறியதைச் சபை ஏற்றுக்கொண்டமையால் பட்டினசபையில் தற்சமயம் நிர்வாகத்தில் திறமையின்மை, தவறான நிர்வாகம், தீய நடத்தை முதலியன பற்றிப் பகிரங்க விசாரணை நடாத்தப்படவேண்டுமென உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணை சபைக் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை.

தமது பிரேரணையைச் சபை ஆராய முற்படாதபோது, திரு. இருபாமூர்த்தி பேசுகையில் ஒரு சந்தர்ப்பத்தில் பட்டினசபையில் நிறைந்துள்ள ஊழல்களின் பட்டியல் தம்மிடம் தயாராக உள்ளதாகவும், ஸ்தல ஸ்தாபன மந்திரிக்கு அறிவிக்கும்பட்சத்தில், அமைச்சர் சபையைக் கலைக்கத் தயங்கமாட்டார் எனவும் குறிப்பிட்டார்.

கலரியில் பொதுமக்கள் அதிகம் காணப்பட்ட இன்றைய கூட்டத்தில் நீண்ட நேர விவாதங்களின்றிச் சுமார் இருபதுக்கு மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சக்தி வழிபாட்டின் முக்கியம்

நாவலப்பிட்டி, வியா

"உலக இன்பங்களை நாம் அனுபவிக்க சக்தியினுடைய தொடர்பு நமக்கு மிக அவசியம். ஆன்மாக்களை ஆண்டவனோடு சேர்த்து வைப்பதில் சக்திக்கும் முக்கிய பங்குண்டு. சிவன் முருகனாதிய தெய்வங்களுக்கு வழிபாட்டு ஸ்தலம் எடுக்குமுன்பே நம் முன்னோர்கள் சக்திக்கு கோவில் எடுத்து வழிபாடு செய்து வந்தனர்".

இவ்வாறு மதுரை ஆதீன செஞ்சொற் செம்மணி ஸ்ரீமதி மா. சண்முகவடிவு அம்மையார் டிக்கோயா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் மண்டபத்தில் நிகழ்த்திய கதாகாலக்ஷேபத்தில் குறிப்பிட்டார்.

அம்மையார் மேலும்பேசுகையில், 'ஆறு குழந்தைகளாய் சரவணப் பொய்கையில் வந்துதித்தவர்களை, ஒன்றுசேர்த்து கந்தன் என்ற திருநாமம் சூட்டியவர் சக்திதான். சக்தியின் இயக்கத்தால்தான் அண்ட புவனமும் ஆட்கொள்ளப்படுகிறது. நாம் முருகனை வணங்க முக்கிய காரணமே சக்தியின் சிறப்புத்தான். சக்திவேல் தாங்கிய முருகனை வழிபாடு செய்வதால்தான் நாம் சக்தியின் அருளுக்குப் பாத்திரமாகலாம். தலைவன் எவ்வளவு பொருளீட்டி வந்தாலும் அதனை வைத்து வழிநடத்துபவர் தலைவியே. அதைப்போல் சக்தியும் எங்களை வழிநடத்திச்செல்பவர். பிறவிப் பிணிக்கு ஞானமாகிய ஒளஷதத்தைக் கொடுத்துக் காப்பவரும் சக்திதான்". என்றார்.

## கைத்தறி நெசவு இயந்திரமயமாக்கப்படும்

கொழும்பு, வியாழன்

கைத்தறி நெசவுத் தொழிலை யந்திரமயமாக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதற்கான பரீட்சார்த்த வேலைகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

கனரக பொருள் கூட்டுஸ்தாபனம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கைத்தறி நெசவுத் தொழிலை யந்திரமயமாக்குவதால் அதிக அளவு துணி விரைவில் உற்பத்திசெய்ய முடியுமெனவும் இதனால் ஜவுளி உற்பத்தியில் மேலும் நாடு முன்னேறமுடியும் எனவும் கருதப்படுவதாலேயே இத்திட்டம் வகுக்கப்பட்டு விரைவில் பல இடங்களிலும் செயல்படுத்தப்படவிருக்கிறது.

### தொழிலாளர் பீதி

கொத்மலை, வியாழன்

சில மாதங்களுக்கு முன் இலங்கையில் ஏற்பட்ட தேயிலை விலை வீழ்ச்சியின் காரணமாக மலைநாட்டில் அநேக கம்பனித் தோட்டங்கள் அடிக்கடி கைமாறுவதைவிட்டு மலையகத் தொழிலாளர் பீதியடைந்துள்ளனர்.

### ஜீவனாம்சம் கட்ட உத்தரவு

வல்வெட்டித்துறை, வியா.

உடுப்பிட்டியைச் சேர்ந்த தவமணி என்பவர் அதே ஊரைச் சேர்ந்த தனது கணவனான கந்தையா சதாசிவம் என்பவரிடமிருந்து தனது ஐந்து பிள்ளைகளுக்கு ஜீவனாம்சம் கோரி பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் முன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பதில் நீதிபதி திரு. கே. இரத்தினலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணையின் பின்னர் நீதிபதி, கணவனான சதாசிவத்தை மாதம் 47 ரூபா 50 சதம் கட்டும்படி உத்தரவிட்டார்.

### 20 புதிய தொலைபேசி நிலையங்கள்

கொழும்பு, வியாழன்

அடுத்த வருடத்தில் இருபது புதிய தொலைபேசித் தொடர்பு நிலையங்கள் திறக்கப்படும். அனுராதபுரம், மாத்தறை, திருகோணமலை, மட்டக்களப்பு, கேகாலை, மாத்தளை, பாதுக்க, பெலிகம, இரத்தினபுரி, பலாங்கொடை, ஹொரண, மதுகம, தெனியாய, ரம்புக்கனை, பெதுருத்துடுவ, பண்டாரவளை(?), இனிநொச்சி, கலகா, மாகோ, சினக்குடா ஆகிய இடங்களிலேயே இவ்விருபது நிலையங்களும் நிறுவப்படும். இவற்றுக்கான புதிய கட்டடங்களுக்காகப் பொதுவேலை இலாகா ஐந்து லட்சம் ரூபாய் செலவழிக்கும்.

### செய்திச் சுருக்கம்

**உடன் மாற்றுக**

தோட்டத் தொழிலாளர்களிடம் ரேஷன்புத்தகம், கார்டு ஆகியவற்றை, நகைகளை அடகுவைக்கச் செல்லும்போது மக்கள் வங்கி கோருவதை உடன் மாற்றியமைத்து, அம்மக்களை வின் சங்கடத்திலிருந்து விடுவிக்கும்படி வங்கி ஜெனரல் மனேஜருக்கு ஐ. தொ. கா. பொதுக்காரியதரிசி கடித மூலம் கேட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

**நிவாரண உதவி**

பெரகலை, பதிகொடையில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பதுளை அரசாங்க அதிபர் நிவாரண உதவிகள் செய்துவருகிறார். மண்சரிவினால் தடைபட்ட போக்குவரத்து பாதையை ஹாமதுரு இலாகா சீர் திருத்தம் செய்துவருகிறது.

ஃ ஃ ஃ

**சீரமைக்கப்பட்டுள்ளது**

கல்வி நிர்வாகத்திலும், நிதிவிஷயங்களிலும் திறமையையும், துரிதத்தையும் ஏற்படுத்தக் கல்வி கலாச்சார அமைச்சு முற்றாகச் சீரமைக்கப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

**மாமியாருக்குக் காயம்**

கணவன் மனைவி சண்டையில் குறுக்கிட்ட மாமியார் கத்திக் குத்துக்காயங்களுக்கு ஆளாகி மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இப்பெண் களுவாஞ்சிக்குடியை சேர்ந்தவர்.

ஃ ஃ ஃ

**கதாகாலக்ஷேபம்**

இரத்தினபுரி சிவன்கோவிலில் தினமும் மாலைவேளையில் கந்தபுராண கதாகாலக்ஷேபம் நடைபெற்றுவருகிறது.

### சமயச்சொற்பொழிவு

காரைநகர், வியா:

காரைநகர் சைவமகா சபையின் ஆதரவில் 19-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல், சபைமண்டபத்தில் 'பெரியபுராணத்தின் பெருமை' என்னும் பொருள் பற்றி திரு. க. இ. நடராஜனும், திரு. வே. கந்தையாவும் உரைநிகழ்த்துவர்.

## 'நல்லெண்ணம் வளரவே சாம்ராஜ்ய தொடர்பு'

கொழும்பு, சனி

'சாம்ராஜ்ய நாடுகள் பிரிட்டிஷ் ஆட்சியில் தங்கியுள்ளவை அல்ல. நாடுகளிடையே பரஸ்பர நல்லெண்ணம்வளர ஏற்படுத்தப்பட்டதே இப்போதய அமைப்பு.

இவ்வாறு இலங்கை வந்துள்ள சாம்ராஜ்ய காரியதரிசி திரு. ஆனல்ட்சிமித் நேற்றுநடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

திரு. சிமித் மேலும் பேசுகையில், அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகள் தமது வர்த்தக நிபந்தனைகளை நீக்கினால் தான் அபிவிருத்தி குன்றிய நாடுகள் பயனடையக் கூடியதாக இருக்கும் என்றார்.

திரு. சிமித் கண்டி, பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய இடங்களுக்கு இன்றும் நாளையும் செல்லவிருக்கிறார்.

**மீண்டும் மழை**

கொத்மலை, வியா

கடந்த சில தினங்களாக மலையகத்தில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியுள்ளது. நேற்றுப்பெய்த பெரும் மழையின் காரணமாக கொத்மலை-பதுளை பகுதிகளில் சிற்சில இடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

### தொழிற் சட்டத்தை திருத்த கோரிக்கை

நாவலப்பிட்டி, செவ்.

"தொழில் இலாகாவில் உள்ள இன்றைய சட்டதிட்டங்களின் காரணமாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகளை இழக்க வேண்டி நேரிடுகிறது. முதலாளிமாரின் தான்தோன்றிப்போக்குக்கு மாறாக உடனடி நடவடிக்கை எடுக்க தொழில் கமிஷனர்களுக்கு விசேஷ அதிகாரங்களைக் கொடுத்து, சட்டத்தை மீறும் முதலாளிமார்களைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்".

நாவலப்பிட்டி லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் மாவட்டப் பிரதிநிதி திரு யூ நவரட்ண, தொழில்மந்திரிக்கு அனுப்பி வைத்துள்ள ஒரு மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

### விவசாய விருத்தி யோசனை

வல்வெட்டித்துறை, வியா.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினமும் யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. ஜெயசீலன் ஆகியோர் ஊடக்காடு, மயிலியதனை, கெருடாவில் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு, புகையிலை முதலிய பயிர்களை புதுமுறைச் செய்கை மூலம் அபிவிருத்தியைப் பெருக்கலாம் என்பதை அப்பகுதி விவசாயிகளுக்கு செய்கை மூலமும் பேச்சு மூலமாகவும் எடுத்து விளக்கினர்.

### தீப் பிடித்து கடை சாம்பல்


கொத்மலை, வியாழன்

கொத்மலை - வெட்டகாபெத்த என்ற இடத்தில் எம். புஞ்சிராலை என்பவரது கடையொன்று நேற்றிரவு தீப்பிடித்து சாம்பலாகியது. இத்தீவிபத்தினால் சுமார் 13,000 ரூபா பெறுமதியான பொருட்கள் நாசமாகின என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தீவிபத்து பற்றி நாவலப்பிட்டி பொலிஸ் பகுதியினர் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

ராலே

"யூற்றிலிட்டி"
ஸ்பிரிங் பிரேம்
இப்பொழுது கிடைக்கும்



தொடர்பு கொள்ளுங்கள்
த பர்மா ரீக் ட்ரேடிங் கம்பெனி லிமிட்டெட்,
62, புளுமெண்டால் ரோட்,
கொழும்பு-13.
போன்: 2233, 2234
கிராம்ஸ்: Teaklog.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் நலன் கருதியே ஆசிரியர் இடமாற்றம்

புன்னாலைக் கட்டுவன், புதன்

"பொதுவாகப் பாடசாலைகளையும், சிறப்பாகப் பரீட்சைக்குரிய வகுப்புகளின் வேலையும் பாதிக்கப்படாத அளவுக்கே இனிமேல் ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படுவர். ஆனால் சுவாத்திய மின்மை காரணமாகவும் வேறு தவிர்க்க முடியாத வசதியீனங்கள் காரணமாகவும் ஓர் ஆசிரியர் இடருற்றால், அவரது திறமையை ஆக்கபூர்வமான முறையிற் பயன்படுத்துவதற்காக அவர் வேறிடத்துக்கு மாற்றப்படுவார்" என்று இவ்வாரம் வெளியான கல்வி அமைச்சின் சுற்றறிக்கை ஒன்று கூறுகிறது.

அது மேலும் கூறுவதாவது:

"விசேட பாட ஆசிரியரும், விசேட கடமைகளாற்றும் ஆசிரியரும், அவர்களைப் போன்ற கல்வித் தராதரம் பெற்ற ஆசிரியர்கள் கிடைத்தாலன்றி, அவர்களுடைய தற்போதைய பாடசாலைகளிலிருந்து மாற்றப்பட மாட்டார்கள். பரஸ்பர சம்மதத்துடன் இடம் மாறக் கோரும் ஆசிரியர் இருவர் ஒத்த கல்வித் தராதர முடையோராயிருப்பதுடன், ஒருவர் தமது பாடசாலையிற் புரியும் அந்தந்த கடமைகளையும் ஆற்ற மற்றவர் சம்மதந் தெரிவிக்க வேண்டும்.

"மாணவ ஆசிரியராக ஒரு மாவட்டத்தில் நியமனம் பெறும் ஆசிரியர், அம் மாவட்டத்துக்கு வெளியே மாற்றப்பட மாட்டார். அவ்வாறே எவ்வாசிரியர் மீதாவது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர் விசாரணை செய்யப்படவிருப்பின், அவரும் அவரது பிரதேசத்தினின்றும், வெளியே மாற்றப்பட மாட்டார்.

"இரண்டு ஆண்டுகளுக்கொருதடவை முதலாந் தவணை ஆரம்பத்தில் ஆசிரியர் இடமாற்றஞ் செய்யப் படலாம். எந்த ஆசிரியராவது ஒரு பாடசாலையில் இரண்டு ஆண்டுகள் கடமையாற்றிய பின் இடமாற்றங் கோரலாமெனினும், பொதுவாக இடமாற்ற விடயங்களில், பாடசாலையின் நலனே முதலிற் கவனிக்கப்படும்".

## ஆசிரியைகளுக்கு வலைப்பந்தாட்டப் பயிற்சி

புன்னாலைக்கட்டுவன், புதன்

வடபகுதிப் பாடசாலைகளிற் கடமையாற்றும் உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கான வலைப்பந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்று இம்மாதம் 20ம் திகதி தொடக்கம் 24ம் திகதி வரை உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும். இதில் ஆவுஸ்திரேலியப் பெண்மணியான செல்வி ஆன் ஹெண்டர்சன் என்பவரும் கலந்துகொள்வார். இறுதித்தினத்தில் பாடசாலை மாணவிகளும் கலந்து கொள்வார்கள்.

வேம்படி மகளிர் பாடசாலை அதிபர் செல்வி எம். தம்பையாவால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள முகாமில் வடபிரதேசக் கல்வியதிகாரி திரு. எஸ். தணிகாசலமும் கலந்துகொள்வார்.

## தீர்ப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

சட்டவிரோதக் குடியேற்றக்காரரான சின்னவன் வேலுவை வேலைக்கு அமர்த்தியதாக குருநகர் பேக்கரிச் சொந்தக்காரரான வில்லியம் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

காங்கேசன்துறை சட்டவிரோத குடியேற்றத் தடுப்புப் பகுதி பொலிஸாரினால் தொடரப்பட்ட இவ்வழக்கில் கரையூர் பொலிசைச் சேர்ந்த அப்புஹாமி, சின்னவன் வேலு, குருநகர் கிராமசேவகர் டொமினிக், சப் இன்ஸ்பெக்டர் ஜோசர். வில்லியம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

எதிரி சார்பில் புறக்டர்களான எம். சி. கதிரவேலு. ஏ. அன்ரனி, வி. நடராசா ஆகியோர் ஆஜரானார்கள். தலைமை நிலைய இன்ஸ்பெக்டர் மூர்த்தி வழக்கை நடத்தினார்.

விசாரணையின் பின் மாஜிஸ்டிரேட் தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 30-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, வியாழன்

தொண்டமானாறு கிராம சேவையாளர் திரு. வே. இரமச்சந்திரா அல்வாய் தெற்குக்கும், அல்வாய் தெற்கு கிராம சேவையாளர் திரு. என். ஜெயவீரசிங்கம் அடுத்தமாதம் முதல் திகதி தொடக்கம் தொண்டமானாற்றுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

## திருமலை சென். ஜோசப் அமோக வெற்றி

திருக்கோணமலை, வியா.

கிழக்கு மாகாண பாடசாலைகளின் 15 வயது 'ஏ' பிரிவு சாம்பியனாக திருக்கோணமலை சென். யோசப் கல்லூரி வெற்றியீட்டியது.

திருமலை சென். ஜோசப்பும் மட்டக்களப்பு செய்ன். மைக்கல் கல்லூரியும் இப்போட்டியில் கலந்து கொண்டன.

சென் ஜோசப் இரண்டு கோல்களைப் போட்டது. செய்ன் மைக்கல் ஒருகோலையும் போடவில்லை.

செய்ன் ஜோசப் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ரசீக்கன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

கிழக்குமாகாண பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் 19வயது 'ஏ' 17வயது 'ஏ', 15வயது 'ஏ' ஆகிய மூன்று பிரிவுகளிலும் திருக்கோணமலை செய்ன். ஜோசப் கல்லூரி வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது.

## விமானப்படை வெற்றி

திருக்கோணமலை, வியா.

கொழும்பு விமானப்படையினருக்கும் திருக்கோணமலை சங்கறைவ் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கொழும்பு விமானப்படையினர் நான்கு மேலதிக கோல்களைப்போட்டு அமோக வெற்றியீட்டினர்.

திருக்கோணமலை சின்ன முற்றவெளியில் நடைபெற்ற இந்த உதைபந்தாட்டப் போட்டியைப்பார்வையிடுவதற்காக பெருந்திரளானரசிகர்கள் குழுமியிருந்தனர்.

ஆரம்ப முதல் இறுதிவரை பலத்தபோட்டியாக விளையாட்டு நடைபெற்றது. விமானப்படை வீரர் திரு. மகிந்தாவின் விளையாட்டு அபாரமாகக்காணப்பட்டது. முடிவில் கொழும்பு விமானப்படையினர் நான்கு கோல்களைப் போட்டனர். சங்கறைஸ் கோஷ்டி ஒருகோலாவது போடவில்லை.

திரு என். சிங்காரவேல் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சாம்பியனானது

திருக்கோணமலை, வியாழன்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வந்த உதைபந்தாட்டப்போட்டியில் 17 வயது 'ஏ' பிரிவு சாம்பியனாக திருக்கோணமலை சென். யோசப் கல்லூரி வெற்றியீட்டியது.

இப்போட்டியில் திருக்கோணமலை சென். யோசப் கல்லூரியுடன் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் போட்டியிட்டது. செய்ன். யோசப் கல்லூரி முன்னணி வீரர்களின் 'பாசிங்' விளையாட்டு எதிரணியினரை திணற வைத்தது. செய்ன். யோசப் கல்லூரி வீரர்களில் ஒருவரான கமலநாதனின் விளையாட்டு ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது. செய்ன். யோசப் கல்லூரி முடிவில் எட்டு கோல்களையும், சிவானந்தா இரண்டு கோல்களையும் போட்டன.

திருக்கோணமலை சுற்றுமதில் விளையாட்டரங்கில் விளையாட்டு நடைபெற்றது.

## ஆலயபரிபாலகர்

திருமலை, வியா.

கந்தளாய் பிள்ளையார் கோயில் பரிபாலனசபைத் தலைவராக வழக்கறிஞர் எம். கே. செல்வராசா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவரின் மாமனாரான தம்பலகாமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. பெ. சரவணமுத்து அந்த ஆலய பரிபாலன சபைத் தலைவராக பல்லாண்டு கடமையாற்றினர்.

## வீட்டில் கஞ்சா இருந்ததாக ஒருவர் கைது

சங்கானை, வியா

சங்கானை மதுவரித் தீர்வை நிலையத்திற்குக் கிடைத்த தகவலின்படி இந்நிலையப் பொறுப்பதிகாரி திரு. ரி. ரகுநாதன் தலைமையிலசென்றகோஷ்டி ஒன்று சங்கானை மேற்கில் பனிப்புலத்திலுள்ள. சின்னத்தம்பி என்பவர்வீட்டைச்சோதனையிட்டு அங்கு 5465 இறெயின்ஸ் கஞ்சாவைக் கைப்பற்றியதாக அறியப்படுகிறது. இதுசம்பந்தமாக சின்னத்தம்பியின் மனைவிமீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்துள்ளது.

## வெள்ளத்தடுப்பு பற்றி பயிற்சி

கொழும்பு. வியாழன்

வெள்ளத்தடுப்பு சம்பந்தமான திட்டங்களில் பயிற்சி பெறுவதற்காக நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த 6 உத்தியோகஸ்தர்கள் லண்டன் சென்றுள்ளனர்.

வருடாவருடம் இலங்கையின் பலபகுதிகளில் ஏற்படும் வெள்ளச் சேதங்களைத் தடுப்பதற்கான திட்டங்களை இவர்கள் இங்கு வந்ததும் தயாரிப்பார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

# தனியார் பாடசாலைகள் மீண்டும் இயங்க வாய்ப்பு

### உதவி வித்தியாதிபதி விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

'உத்தேச தேசிய கல்வித் திட்டத்தின்கீழ் தனியார் பாடசாலைகள் தொடர்ந்து இயங்க வழியிருக்கின்றது. புதிய கல்வி வெள்ளை அறிக்கையிலும் தனியார் பாடசாலைகள் இயங்குவதற்கான அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது'.

இவ்வாறு சென்ற புதன்கிழமை நடைபெற்ற செய்ன் பற்றிக்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து உரையாற்றிய வட பகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் குறிப்பிட்டார். அவர் தமது உரையில் மேலுங்குறிப்பிட்டதாவது:—

'எங்களது கல்விமுறை அதிக புத்தகப்படிப்பாகவும், ஒரேமாதிரியானதாகவும் இருந்து வந்துள்ளது. இது, கல்வி கற்று உத்தியோகமற்றவர்களைப் பெருந்தொகையாக உற்பத்திசெய்வதிலேயே முடிந்துள்ளது.

இந்தக் கல்வி முறையில் உற்பத்திசெய்யும் ஒருவர், உத்தியோகம் கிடைக்காதவிடத்து, வேறு வழியில் தமது சீவனத்துக்குத் தமது கல்வியைப் பயன் படுத்த முடியாத நிலையில் இருப்பதால், அவர் சமூகத்துக்குப் பாரமாகிவிடுகிறார் ஆகவே, தற்போதைய கல்விமுறையைச் சீர்திருத்துவது தேசிய நன்மையின் பொருட்டேயாகும்.

இந்தக் கருத்தை மனதிற்கொண்டே, கல்விச் சீர்திருத்த ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எட்டு வருடங்களுக்கு எல்லாக் குழந்தைகளுக்கும் சாதாரண அடிப்படைக் கல்வி அளிக்கப்படும். அதுஇலவசமும், கட்டாயமுமாகும் இது ஒவ்வொரு குழந்தையும் ஓரளவு கல்வி பெறுவதற்கு உறுதி செய்கிறது. குழந்தைகளின் மனோநிலை விருப்பம், தகுதி ஆகிய வற்றுக்குப் பொருத்தமான கனிஷ்ட கல்வி வகுக்கப்பட்டுள்ளது. ஆரம்ப அடிப்படைக் கல்வியின் முடிவில், மாணவர்கள் நான்கு பிரிவுகளாக வகுக்கப்படுவர்.

மாணவர்களை இவ்வாறு வகுப்பது முறையாக நடைபெறும் எல்லாப் பள்ளிக்கூடங்களும் பொதுவான பாடத்திட்டத்தை ஏற்று அமுலாக்கும். விபரமான வழிகாட்டிப் பிரமாணங்களுக்கமைய கல்வி போதிக்கப்படும். ஆரம்ப பாடசாலைகளின் ஆறுவது வகுப்பிலேயே மாணவர்களைப் பகுதி வகுக்கும் திட்டத்துக்குத் தயார் செய்யப்படும்.

### 'தகுதியற்ற ஜி.சி.ஈ.'

ஜி.சி.ஈ. பரீட்சை, எந்த நோக்கத்தையும் நிறைவேற்றும் தகுதியல்லாததால், கைவிடப்படும். பள்ளிக்கூடப்பாடங்களில் ஒரு குறிப்பிட்டமாணவர் என்ன தராதரம் பெற்றுள்ளார் என்பது பற்றி யாரும் அக்கறை கொள்வதில்லை. ஏனெனில், அது உத்தியோகத்துக்கு ஒரு பாஸ்போர்ட் ஆகாது. இதற்குப்பதிலாகப் பல்வேறு கனிஷ்ட கல்லூரிகளிலுமுள்ள மாணவர்கள், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம், கைத்தொழில், தொழில் நுட்ப தராதரப்பத்திரங்களுக்காகத் தகுதிபெறமுயல்வார்கள்.

### ஒழுங்கீனம் பிரதிபலிப்பே

எமதுவாலிபச் சமுதாயத்தில் அதிகரித்துவரும் ஒழுங்கீனத்தின் மீதும் நாம் நமது கவனத்தைச்செலுத்தவேண்டியுள்ளது. இந்த ஒழுங்கீனம் பிரத்தியேகமாக ஓர் பள்ளிக்கூடப் பிரச்னையாகாது. இந்த ஒழுங்கீனம் நமது சமுதாயத்தின் பிரதிபலிப்பேயாகும். பள்ளிக்கூடங்களை மாத்திரம் நாம் குறைகூறிவிட முடியாது. ஆனாலும், இன்றைய சமுதாயத்திலும்பார்க்கநாளைய சமுதாயம் நல்ல முறையில் அமைய, எமது பள்ளிக்கூடத்திலிருந்து வெளிவரும் மாணவர்கள், கட்டுப்பாடும், திடசித்தமுமுள்ளவர்களாக இருப்பதற்கான அவசர நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்'

செய்ன் பற்றிக்ஸ் கல்லூரி கல்வித்துறையிலும் விளையாட்டுத்துறையிலும் நல்ல சேவை செய்துள்ளதென்றும் ஆசிரியர்களின் நல்ல உழைப்பே இதற்குக்காரணமென்றும் திரு. தணிகாசலம் பாராட்டுத்தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை, வியாழன்

தொண்டமானாறுசெல்வச் சந்நிதி ஆனந்தாச்சிரமத்தில் வெள்ளிக்கிழமை 'ஈசனுடன் ஞானமொழி பேசும் முகம்', 'ஆறுமுகமான பொருள்' என்னும் விடயங்கள் பற்றி ஸ்ரீமத் சுவாமிநாத தம்பிரானும், வித்துவான் திரு. க. கே. ஆறுமுகமும் மாலை 7-30 மணியளவில் பேருரைகள் நிகழ்த்தவிருக்கிறார்கள்.

### வீதி விபத்துகள்

சென்றவருட வீதிவிபத்துக்கள் 14319 ஆகும் 435 பேர் இவ்விபத்துக்களால் உயிர் நீத்தனர்.


# கிரீக்கோ சூப்பர் கோப்பி

## கொழும்பு ஜோன் கீரின் அன்ட் கம்பனியாரின் உற்பத்தி

கவர்ச்சியூட்டும் பைக்கற்றுகள்! அதி நறுமணம் கொண்டது!

மறக்கவே முடியாத ருசியுடையது! நிதான விலை!

கொழும்பில் உள்ள கிரீக்கோ கைத்தொழில் நிலயத்தில் விசேஷ தயாரிப்பு முறைகளைக் கையாண்டு வறுத்து அரைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:

M. M. T. P.

142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கம்யூனிஸ்ட் கட்சி யாழ். கிளை வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி
சத்தியாக்கிரக இயக்கத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டதை வரவேற்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ்ப்பாணக் கிளைச்செயலாளர் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

"சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிக்கு அப்பால் இருந்துகொண்டு சில தீவிரவாதிகள் முன்னணியை நெருக்கடிப் பாதைக்குத் திசைதிருப்பிவிட முனைந்துள்ளதை நிராகரித்து, முன்னணியினர் தமிழர் சமுதாயத்தில் தீண்டாமையை எதிர்க்கும் ஏனைய சக்திகளுடனும் ஓர் உடன்படிக்கைக்கு வந்துள்ளதைக் குறித்து கம்யூனிஷ்ட் கட்சியின் யாழ்ப்பாணப் பிரதேசக் கமிட்டி தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளுவதுடன் அவர்களது தீர்மானத்தையும் வரவேற்கின்றது"

தீண்டாமைப்பிரச்னை என்பது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் இனத்தையே அழித்துவரும் ஒரு பெரியகொடிய நோய். இந்த நோயைத் தீர்த்துக்கட்டுவது என்பது இலேசான வேலையல்ல. இதை மனதில் பதியவைத்துக்கொண்டே தான் இப்பிரச்னையை நாம் அணுகவேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சி இந்நாட்டில் தோன்றிய காலத்திலிருந்தே இந்தத் தீண்டாமைச் சனியனை எதிர்த்துப் போராடி வந்துள்ளது என்பதைச் சகலரும் ஒப்புக்கொள்வார்கள். இன்று ஏனைய அரசியல் கட்சித்தலைவர்களும் மற்றும் தமிழ்ப் பிரமுகர்களும் கல்விமான்களும் சிறுபான்மைத்தமிழர்முன்னணியின் நியாயமான கோரிக்கைகளை இன்று அங்கீகரித்து இதை ஆதரிக்க முன்வந்துள்ளனர்.

ஆகையால் இவர்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டு சிறுபான்மைத் தமிழர் முன்னணி இதுசம்பந்தமாக மீண்டும் எடுக்கும் நடவடிக்கைகளை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் ஆதரித்து வரும் என்று அந்த அறிக்கையில் திரு. ஐ. ஆர் அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

# தொகுதி அடிப்படையில் மாணவ ஆசிரியர் நியமனம்

## திருமலை மாவட்ட ஆசிரியர் கல்வி மந்திரிக்கு மகஜர்

திருக்கோணமலை, வியா.
திருக்கோணமலைமாவட்ட அரசினர் ஆசிரிய சங்கத் நிர்வாகசபைக் கூட்டம்தலைவர் திரு. சி. நடராஜா தலைமையில் நடைபெற்றபோது சங்கத்தின் தூதுகோஷ்டி ஒன்று திருக்கோணமலை மாவட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகள் மூலம் கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையை பேட்டிகண்டு பின்வரும் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பது என்று ஏகமனதாக முடிவு செய்தது.

மாணவ ஆசிரியர்கள் தொகுதி அடிப்படையில் உள்ள காலி ஸ்தானங்களுக்கு ஏற்ப தெரிவு செய்யப்படல் வேண்டும்.

(5-ம் பக்கம் பார்க்க)

## தேசியசுவீப்....

(1-ம் பக்க தொடர்ச்சி)

| | |
|---|---|
| 19 L 0383 | 23 T 0483 |
| 28 R 0414 | 36 M 0062 |
| 19 K 0555 | 01 A 0950 |
| 27 V 0820 | 27 H 0063 |
| 05 Q 0986 | 07 J 0214 |
| 25 A 0630 | 35 D 0437 |
| 05 G 0833 | 14 Y 0173 |
| 01 G 0115 | 33 S 0373 |
| 10 X 0761 | 29 E 0006 |
| 08 A 0945 | 11 R 0932 |
| 03 E 0487 | 04 X 0807 |
| 26 U 0006 | 13 X 0789 |
| 31 Z 0884 | 37 S 0216 |
| 14 J 0702 | 36 N 0327 |
| 04 N 0179 | 41 F 0465 |
| 18 K 0242 | 31 Q 0357 |
| 27 Q 0584 | 11 N 0311 |

(இவை உறுதிப்படுத்தப் படவேண்டியவை)

## முந்திரிச்செய்கைக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட விவசாய இணைப்புக்குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

விரைவில் விவசாயப்பகுதி டைரக்டரையும், கால்நடை இலாகாவின் அபிவிருத்தி, பண்ணை ஆகியவைகளின் உதவி டைரக்டர்களையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து விவசாய விருத்திபற்றி ஆலோசனை நடத்துவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மலையாளம் புகையிலை சம்பந்தமாக வர்த்தக அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அரசாங்க ஆராய்ச்சி நிலைய அதிகாரி ஒருவரை யாழ்ப்பாணத்துக்கு அரசாங்கம் அனுப்பியதாகத் தெரிவித்தபோதிலும் இன்னமும் அந்த அதிகாரி யாழ்ப்பாணம் வந்து சேரவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

நீர்ப்பாசனம், விவசாயம் சம்பந்தமாக கிளிநொச்சிப் பகுதிக்கு தொண்ணூறு சதவீத பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

# 'வெற்றியின் முதல்படி பூர்த்தியாகின்றது'

## சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி
'இம்மாவட்டத்திலுள்ள சகல இந்து ஆலயங்களையும் சகல இந்து மக்களின் வழிபாட்டுக்கும் திறந்துவிடுவதற்கும் சகல சாதி ஒடுக்குமுறைகளைக் களைவதற்கு மூன்று மாதகால எல்லைக்குள் ஆவன செய்வேன் என்று மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா முன்னணி அதிகார சபையினரை அழைத்துப் பேசிப்பொறுப் பேற்றுக் கொண்டுள்ளார் இதனால் எமது வெற்றிக்கான முதலாவது படியின் வேலைத்திட்டம் ஓரளவு பூர்த்தியாகிறது."

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் இணைச்செயலாளர்கள் திருவாளர்கள் ஏ. நல்லையா, எம். சி. சுப்பிரமணியம், ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்ட கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

18-9-66 எமது பிரகடனத்தினமாகும். அன்றிலிருந்து இன்றுவரை நாம் கண்டு வந்த சிறு சிறு வெற்றிகளின் ஒட்டு மொத்தமான பயன் நாம் அளித்த அவகாசத் தினமாகிய 18-11-66க்கிடையில் நிறைவேறியது கண்டு எமது மக்கள் உற்சாகமும் உறுதியும் அடைய வேண்டும்.

அதிபர் அவர்களால் கோரப்பட்ட கால எல்லை வரைக்கும் சாத்திரமாக நாமும் எமது பணிகளைச் செய்து எமது எதிர்ப்போ நிக்கைகளையும் அடக்கிச் செயல்படவேண்டும்.

'இதுவரை எமக்கு ஆதரவு தந்த சைவப்பெரியார்களுக்கும் எமது பரிபூரண நன்றியைத் தெரிப்பதுடன், எமது கோரிக்கைகள்யாவும் பூர்த்தியாகும்வரை எமக்கு ஒத்தாசை தரக்கோருகிறோம்.

# மந்திரியின்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம மந்திரிக்கும் அறிவித்திருக்கின்றது.

இதற்கிடையில் துறைமுகத்திலும் வேலைநிறுத்தம் பரவக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது. வேலை நிறுத்தம் நடைபெறும் 67 ஸ்தாபனங்களையும் சேர்ந்த சரக்குகளின் ஏற்றுமதி இறக்குமதிகளை கையாளுவதில்லையென்று ஏற்கனவே துறைமுகத்தில் தொழில் வர்த்தக ஊழியர்கள் முடிவுசெய்துள்ளனர். இதனால் இந்த ஸ்தாபனங்களுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் என்று கருதப்படுகின்றது.

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

ஜி. சி. ஈ. (உயர்தரம்) 1-ம் வருட விஞ்ஞானம், கலை வகுப்புகளில் வெற்றிடம் உண்டு. கல்லூரி காரியாலயத்தில் கிடைக்கும்பத்திரத்தை நிரப்பி 1966-ம் வருடம் டிசம்பர் 5-ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்.

யாழ்ப்பாணம்,
16-11-66. 1391

# JAFFNA COLLEGE

## Vaddukoddai

Wanted from 1-1-1967 Graduates(preferably Ceylon) with

(a) Zoology

(b) Chemistry with Mathematics and/or Physics for work primarily in the G. C. E. Advanced Level classes. Proficiency in Tamil essential. Coaching of games an additional qualification. Apply before the 30th of November 1966 to the Principal. 1386

# தேவை

லொறிச் சாரதி

திடகாத்திரமான, 40 வயதுக்குட்பட்ட லொறிச் சாரதிஉடன்தேவை. குறைந்தது 5 வருட அனுபவமும், குற்றப் படாதவருமாயிருத்தல் வேண்டும். லைசென்சுடன் நேரில் விண்ணப்பிக்கவும்.
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 58, K. K. S. ரோட், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மா 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 'வட்டமிட்டவர்' அகப்பட்டார்

திருநெல்வேலி, வெள்ளி
இளம் பெண்ணொன்றைச் சுற்றி வட்டமிட்டுத் திரிந்த வாலிபர் ஒருவர் பொலிஸார் முன் ஆஜர் செய்யப்பட்டார். இச்சம்பவம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியிலுள்ள குழந்தைகள் சிகிச்சை நிலையத்தில் நடைபெற்றது.

# இராமநாதன் நினைவுவிழா

உடுவில், வெள்ளி
உடுவில் இராமநாதன் கல்லூரியில் இன்று மாலை ஆறுமணியளவில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் நினைவுதின விழா கொண்டாடப்படவிருக்கிறது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக திரு. விக்டர் பெரேரா கலந்துகொண்டு உரையாற்றுவார். மற்றும் வடபகுதி வித்தியாதிபதி திரு. தம்பிராசலம், உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தர்மலிங்கம் ஆகியோர் உட்பட பலர் இராமநாதனின் நினைவுரைகள் நிகழ்த்துகின்றனர்.

# கடலில் மிதந்த பொருள்கள்

## சுங்கப்பகுதியினர் கைப்பற்றினர்

மாவிட்டபுரம், வியா.
நடுக்கடலில் கேட்பாரற்றுக்கிடந்த சுமார் பதினோராயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை இலங்கைகடற்படையினர் நேற்றுக் கைப்பற்றியுள்ளார்கள். இவை கள்ளக்கடத்தல் பொருள்கள் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

காரைநகர் கடற்படைத் தளத்தைச்சேர்ந்த லெப்டினன்ட் ஜெயநெத்தி தலைமையில் சென்ற கடற்படையினர் நேற்று ரோந்து சுற்றி வருகையிலேயே நடுக்கடலில் கேட்பாரற்றுச் சில பொருள்கள் மிதப்பதைக் கண்டதாகவும் உடனே கடற்படை யந்திரப்படகில் அவ்விடத்திற்கு விரைந்து சென்று அப்பொருள்களைக் கைப்பற்றினார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமாலை விசாரணை நடத்திய வடபகுதி உதவிச் சுங்கக் கலெக்டர் திரு. கே. கந்தசாமி பொருள்களைப்பறிமுதல் செய்து அவற்றைச் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைத்துள்ளார்.

# நாயை மனிதன் கடித்துக் கொன்றான்

லண்டன், நவ. 17
தன்னைப் பார்த்துக் குரைத்த நாயைக் கடித்துக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட இம்மானுவேல் ஹரிஸ் போஜியே என்னும் மாஜிஸ்திரேட் இன்றைக்குப் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்.

# படித்தஇளம்பெண்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விழாவில் உதவி அரசாங்க அதிபர்மேலும் கூறியதாவது; அரசாங்கத்தின் எட்டு குடியேற்றத்திட்டங்களில் இரண்டு வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வில்வம் குடியேற்றத்திட்டத்தில் 1200 ஏக்கர்நிலம் உணவுஉற்பத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது 100 இளைஞர்களுக்கு காணிவழங்கப்பட்டுள்ளது. அடுத்தவருடம் மேலும் 300படித்தவாலிபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ்காணிவழங்கப்படும். திருவையாறு குடியேற்றத்திட்டத்தில் 200 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 100 இளைஞர்கள் காணி பெற்றுள்ளார்கள். இத்திட்டங்களின் மூலம் ஒவ்வொருவாலிபருக்கும் 5000 ரூபா வீதம், இரண்டரைக்கோடி ரூபா அரசாங்கம் செலவிடுகிறது. அத்துடன் பாடசாலை, தபாற்கந்தோர், வீடுகள்இணைகளும்வழங்கியுள்ளது.,

புதிதாக வடபகுதியில் மேலும் இரண்டு குடியேற்றத்திட்டங்களைக் கொண்டுவர அரசாங்கம் யோசித்துள்ளது.

வித்தியாலய அதிபர் திரு. எஸ். அம்பிகைபாகன் பேசும்பொழுது மாணவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவேண்டுமென்றும், ஓய்வுநேரங்களில் பயனுள்ள வேலைகளில் ஈடுபடவேண்டுமென்றும் கூறினார்.

பேச்சுப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு திருமதி சபாரத்தினம் பரிசில்களை வழங்கினார். கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. கூட்டம் ஆரம்பமாவதற்குமுன், சிற்றுண்டி விருந்து நடைபெற்றது.

# சுடு தேநீர்பட்டு குழந்தை மரணம்

திருநெல்வேலி, வெள்ளி
ஒரு வயதுக்குழந்தை சுடுதேநீர் உடலில் பட்டதின் காரணமாக இறந்துவிட்டது. இந்தச் சம்பவம் வண்ணார் பண்ணைக் கொட்டடியில் நடந்தது.

வண்ணார் பண்ணைக்கொட்டடியைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளையின் ஒரு வயது மகள் பிரேமவதி என்ற இக்குழந்தையின் மரணம் சம்பந்தமாக மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் கனகரத்தினம் விசாரணை நடத்தினார்.

குழந்தையின் தாய் நாகேஸ்வரி, டாக்டர் விநாயகமூர்த்தி ஆகியோரும் சாட்சியமளித்தனர். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விபத்தினால் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பளித்தார்.

# வாடகைக்கார் கைப்பற்றப்பட்டது

மாவிட்டபுரம், புதன்
வடிசாராயம் கடத்தியதாக வாடகைக்கார் ஒன்றையும் வடி சாராயத்தையும் சுன்னாகம் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று சார்ஜண்ட் சின்னத்தம்பி தலைமையில் சென்ற போலிஸ் கோஷ்டியினர் உரும்பராயில் சந்தேகத்தின் பேரில் ஒருடாக்சியை மறித்துச் சோதனைசெய்தபொழுது காருக்குள் அறுபது போத்தல் வடிசாரயம் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் உடனே பொலிசார் டாக்சி சாரதியான தம்பிராசா இராசகிளியையும் காருக்குள்ளிலிருந்த கணபதி சிவப்பிரகாசத்தையும் கைதுசெய்ததுடன் டாக்சியையும் தங்கள் பாதுகாப்பில் எடுத்துக் கொண்டார்கள் என்றும் கூறப்படுகின்றது,

மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் இவர்கள் ஆஜர்செய்யப்பட்டபொழுது முதலாம் எதிரி சுற்றவாளியென்றார். இரண்டாம் எதிரி தாம் குற்றவாளியென்றார். நீதிபதி இரண்டாம் எதிரிக்கு தண்டனை வழங்குவதற்காக வழக்கை இம்மாதம் 29-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். ஆயிரம் ரூபாய் பிணையில் டாக்சியை எடுத்துச்செல்லும்படியும்உத்தரவிட்டார். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பேர்ஸி விஜயசுந்தர வழக்கை நடத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org